தென்மோடி நாட்டுக்கூத்து

# வித்துக்கள்

(ஈழ மண்ணில் வேத சாட்சிகள்)

கவிஞர்
தேவதாசன்
யாழ்நகர்,
இலங்கை.



அச்சேற்றலாம் :

+ **வ. தியோகுப்பிள்ளை**
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்
10-01-1990

வெளியீடு :

**யாழ்/கத்தோலிக்க இலக்கியக் கழகம்**

விலை. ரூபா : **10/=**

அநாதி நம

# "வித்துக்கள்"

## ( ஈழமண்ணில் வேதசாட்சிகள் )

## தென்மோடி நாட்டுக்கூத்து

### காப்பு விருத்தம்

பூபோற்றும் மாந்தையாம் புரியில் அன்றே
புரவலனால் பலியெடுத்தோர் புனிதர் காதை
பாபோற்றும் காரணர்கள் பாரில் காத்த
பைந்தமிழால் நாடகமாய்ப் பாடுதற்கே
நாபோற்றும் வரலாற்று நாத னோடு
நாவழியா பதுவைமுனி பாதம் போற்றி
மாபோற்றும் மரியன்னை மாதா வுந்தன்
மதிதவழும் மலர்ச்சரணம் காப்புத் தானே

### தோடையம்

தெண்டிரை கொண்டதோர் மன்னாரில்
தெய்வ மகனாம் யேசுவுக்காய்
விண்ணது சென்றதோர் வீரரவர்
விளங்குபுகழ் பாட
முத்துடன் தித்திக்கும் தேனுடனே
முல்லை நறுமலர் காணுகின்ற
மெத்தெழில் மாந்தையாம் நகர்தனையே
மென்னுரையில் ஓத
அஞ்சிய நஞ்சுகொள் பாம்பதையே
அடியதில் வைத்த அன்னையவள்
தஞ்சமே யென்றதாய் தாழ்ப்பணிந்தே
தமிழிசையால் கூற

# வித்துக்கள்

## ( ஈழமண்ணில் வேதசாட்சிகள் )

### நாடகப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| மதகுரு சவேரியார் | — | புனித பிரான்சிஸ் சவேரியார் |
| செல்வி டயானா | — | பிரான்ஸ் நாட்டு பரீஸ் பல்கலைக்கழக பட்டதாரி மாணவி |
| செல்வன் சாமுவேல் | — | பிரான்ஸ் நாட்டு பரீஸ் பல்கலைக்கழக பட்டதாரி மாணவன் |
| சந்நியாசி இஃனாசியார் | — | புனித இன்னாசியார் |
| சங்கிலியன் (செகராசசேகரன்) | — | யாழ்ப்பாண இராட்சியத்தின் கடைசி மன்னன் |
| வீரமாணிக்கத்தேவர் | — | சங்கிலியன் படைத்தளபதி |
| அப்பா முதலி | — | சங்கிலியன் ஆட்சிக்குக் கீழுள்ள கதிரமலை அல்லது கந்தரோடை அதிபதி |
| இளம் சிங்கன் | — | சங்கிலியனின் மூத்த மகன் வேதசாட்சிகளில் ஒருவன் |
| சேவகன் — 1<br>சேவகன் — 2<br>ஏவலன் — 1<br>ஏவலன் — 2 | — | சங்கிலியன் அரண்மனைக் காவலர்கள் |
| மாதோட்ட வியாபாரி<br>வங்காலை வியாபாரி<br>முசலி வியாபாரி | — | மாந்தை மாநகரில் வியாபாரம் செய்பவர்கள் |
| கப்பல்காரர் — 1 | — | மாந்தைநாட்டு சிற்றரசன் |
| கப்பல்காரர் — 2 | — | மகதனின் கப்பலோட்டிகள் |
| முரசறிவிப்போன் | — | சங்கிலியனின் கட்டளைக்காரன் |
| மாந்தைநகர் ஆண்கள்<br>மாந்தைநகர் பெண்கள்<br>சிறுவன் | — | மதம்மாறிய கிறிஸ்தவர்கள் |

# ஆய்வு முன்னுரை

எஸ். சிவலிங்கராஜா, எம். ஏ.
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்

ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்றிலே துலங்காத பகுதிகள் பலவுள. முழுமையாகத் தகவல்கள் கிடைக்கும்வரை துலங்காமை தொடர்ந்துகொண்டே இருக்கும். தகவல்கள் கிடைக்காவிடினும் நீண்ட ஒரு கலைப்பாரம்பரியம் ஈழ நாட்டிலே நிலவியதற்கான தடயங்கள்பல கிடைக்கின்றன. கிடைக்கின்ற தடயங்கள் வழி செல்லும்பொழுது நமது கலை இலக்கியச் செழுமையின் சில அம்சங்களை அடையாளங் காணமுடியும்.

கவிஞர் தேவதாசனின் வித்துக்கள் என்னும் இந்நாட்டுக் கூத்து, நீண்ட ஒரு பாரம்பரியமுள்ள நமது நாடக வரலாற்றின் தொடர்ச்சி யையும் போக்கையும் புலப்படுத்துவதாக அமைகின்றது. ஈழத்தின் செழுமைமிக்க ஒரு கூத்து மரபின் சொந்தக்காரர்களான கத்தோலிக் கர்களின் கலை இலக்கியப் பணியின் அறாத தொடர்ச்சியினை வித்துக் கள் எனும் நாட்டுக் கூத்து வெளிக்காட்டி நிற்கின்றது.

ஈழநாட்டிற்கு வந்த கத்தோலிக்கர்கள் ''உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'' என்ற தமிழிலக்கண மரபை விடுத்து, உலகம் என்பது பொதுமக்கள் மேற்றே என்ற உண்மையை உணர்ந்து தமது மதச் செயற்பாடுகளை ஆரம்பித்தனர். எளிதிற் புரிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்புகின்ற ''மெட்டு'' இவற்றினை யுடைய இலக்கிய வடிவங்களைத் தமது மத ஊடாட்டங்களுக்குக் கருவியாகப் பயன்படுத்தினர். பொதுவாகக் கிறித்தவம், சிறப்பாக கத்தோலிக்கம் ''பாமர இலக்கியங்கள்'' எனக் கருதப்பட்ட பள்ளு, குறவஞ்சி, அம்மானை, கும்மி முதலிய இலக்கிய வடிவங்களுக்கு முக் கியத்துவம் கொடுத்தது. தமது கருத்தை இலகுவாக மக்களுக்குக் கொடுக்கவும், மக்களை இலகுவாக எடுக்கவும் கிராமியக் கலை இலக் கிய வடிவங்கள் சிறந்த ஊடகங்களாகக் காணப்பட்டன.

ஏலவே இலக்கிய மரபாக மாறியிருந்த நாட்டார் இசை இலக் கிய வடிவங்களைத் தமது மதவிடயங்களுக்கு கத்தோலிக்க மதம் பயன் படுத்தி வெற்றியும் கண்டது. ஈழத்திலே இன்று கிடைக்கின்ற, காலத்

தால் முந்தியது எனக் கருதப்படும் ஞானப்பள்ளு, அர்ச். யாகப்பர் அம்மானை என்பன கத்தோலிக்கமதச் சார்புடையனவே.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்கமதச் சார் புடைய பல தமிழ் இலக்கியங்கள் ஈழத்திலே நிலவி வந்தன என்ப தையே ஞானப்பள்ளும் அர்ச். யாகப்பர் அம்மானையும் காட்டுகின்றன.

இயல்பாகப் பாடுந்திறஞ்படைத்த, பாட்டுகட்கும் ஆற்றல் கொண்ட கத்தோலிக்கமதச் சார்புடைய புலவர்கள் ஈழத்திலே வாழ்ந் துள்ளனர். இப்புலவர்களிலே பெரும்பாலானோர் அண்ணாவிகளாகவே கருதப்பட்டனர் (அண்ணாவி என்ற சொல்லுக்கு ஆசிரியன் என்ற பொருளும் உண்டு.) ''அண்ணாவி மரபு'' ஈழத்துக் கல்விப் பாரம் பரியத்திலே அறாத்தொடர்ச்சியுடன் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை யையும் அவதானிக்கலாம். ஆக்கத்திறன் கொண்டவனாகவும், பாடி நடிக்கும் ஆற்றல் உடையவனாகவும் இலக்கிய பரிச்சமுடையவனாக வும் அண்ணாவி காணப்பட்டான். இதனாலே சமூக அந்தஸ்து அதிகரித்து அண்ணாவி மரியாதை ஒருமையில் அண்ணாவியார் என அழைக்கப்பட்டமையையும் அவதானிக்கலாம்.

ஈழநாட்டிலே பண்டு தொட்டு நிலவி வந்த கூத்து மரபு கத் தோலிக்கத்தின் வருகையால் புதுமையும் பிரசித்தமும் அடைந்துள்ளது என்பதிற் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது. கத்தோலிக்க மதச்சார் புடைய அண்ணாவிமார்கள் பல நாட்டுக் கூத்துக்களை இயற்றிப் பழக்கி மேடையேற்றுவித்துள்ளனர். சில அச்சுவாகனமும் ஏறியுள்ளன.

ஈழநாட்டிலே கத்தோலிக்கர்களிடையே நாட்டுக்கூத்துக் கலை வடிவம் பேணப்பட்டு வந்தளவுக்குச் சைவசமயத்தினரிடையே பேணப் படவில்லைப்போலத் தோன்றுகின்றது. புராண, இதிகாச, நீதி போதனைபுரியும் பல சைவசமயச்சார்புடைய நாட்டுக்கூத்துக்கள் ஈழத்திலே பயிலப்பட்டுவந்தது உண்மையேயெனினும் அவை பிற்காலத் திலே பேணப்படாமைக்கும் அழிந்துபோனமைக்கும், சிற்சில பகுதி களில் ஒதுங்கிநின்றமைக்கும் சில காரணங்கள் உண்டு எனலாம்.

''நாடகம் சாராமை நன்று'' என்ற எமது நீதி நூலின் கல்விப் பாரம்பரியம்.

சமூகமாற்றமும், அரசாங்கத் தொழில் வாய்ப்புக்களும்

ஈழத்திலே மேலாண்மைபெற்ற ஆறுமுகநாவலரின் சைவத் தமிழ் இயக்கம்.

மேற்காட்டிய காரணங்களுள் மூன்றாவதாகக் குறிப்பிட்ட நாவலரின் சைவத் தமிழ் இயக்கம் ஆடம்பரத் திருவிழா, கூத்து முதலியன ஒழுக்கக்கேட்டிற்கும், சமூகச் சீரழிவிற்கும் காரணம் என்பதை வலியுறுத்தியது. நாவலரின் சைவத் தமிழ் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர்கள், பேணியவர்கள் ஈழச் சமூகத்தின் மேல்மட்டத்தினரேயாவர். எனவே ஈழத்தின் உயர்குடிச் சமூகத்தில் கூத்தும் ஒரு தீண்டத்தகாத விடயமாகக் கணிக்கப்பட்டுவந்துள்ளது. ஈழத்து நாடகமரபில் புகழ் பெற்ற அண்ணாவிமார்களிற் பலர் நாவலரின் ''சைவத் தமிழர்கள்'' பட்டியலில் இடம்பெறாதவர்களேயெனலாம்.

ஒதுக்கு நிலையில் அல்லது ஒதுங்குநிலையில் சைவ இந்துக் கூத்துமரபு கரந்துறையக் கத்தோலிக்க கூத்துமரபு பழமையையும் பேணிப் புதுமையையும் புகுத்திப் புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. தமது பொருளைப் பழைய வடிவுள் அழகுணர்வுடன் புகுத்திக் கத்தோலிக்கர்கள் மகத்தான வெற்றியைக் கண்டனர்.

நாவலர் மரபினர் எனக் கருதப்பட்டோர் மணிமாலை, கோவை, இரட்டை, யமகம், திரிபு, நிரோட்டகம் முதலிய இலக்கிய முயற்சிகளிலே ஈடுபட கத்தோலிக்க மதச்சார்புடையவர்கள் பொதுமக்கள் சார்புடைய அம்மானை, பள்ளு, கும்மி, முதலியவற்றைப் பாடிக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, சிலாபம், நீர்கொழும்பு முதலிய பகுதிகளிலே சிறப்புடன் பயிலப்பட்டுவரும் ஒரு கலைவடிவாகக் கத்தோலிக்கக் கூத்துக்கள் காணப்படுகின்றன, இவை நிலை பெற்றமைக்கும், புதுப்பொலிவு பெற்றமைக்கும் பல காரணங்கள் உண்டு.

(அ) கத்தோலிக்க கூத்துக்கள் அடிநிலையில் உள்ள, தொழிலாள வர்க்கத்தின் மகிழ்வூட்டும் கலை நிகழ்வாக விளங்கியமை.

(ஆ) பெரும்பாலான கூத்துக்கள் சமய நம்பிக்கைளின் அடிப்படையில் எழுதப்பட்டமையும் ஆடப்பட்டமையும்.

(இ) கத்தோலிக்க மதம், சிறப்பாக மதகுருமார் மிகுந்த ஊக்கம் கொடுத்தமை.

(ஈ) சமயச்சார்புடைய தினங்களில் அடிக்கடி கூத்துக்கள் நிகழ்ந்தமை

(உ) ஸ்பானிய நாடக மரபை நன்கு அறிந்திருந்தவர்களின் ஆலோசனையைப் பாரம்பரியக் கூத்துக் கலைஞர்களும் அண்ணாவிமாரும் பெற்றமை.

மேற்காட்டிய காரணங்களோடு ஒருவித சமூக, சமய ஒன்று கூடல் நிகழ்வாகக் கூத்துத் திகழ்ந்தமையையும் சேர்த்துக் குறிப்பிடலாம்.

இத்தகையதொரு பின்னணியுடன்தான் கவிஞர் தேவதாசனின் வித்துக்கள் எனும் நாட்டுக்கூத்தினை அணுக முடியும்.

இக்கூத்து அளவிலே சிறியதானாலும் ஈழத்து நாட்டுக்கூத்துக் களின் மரபிலே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படு கின்றது. கூத்தின் அமைப்பிலே ஆசிரியர் சிற்சில மாற்றங்களையும் செய்துள்ளார் போலத் தோன்றுகின்றது.

நம் நாட்டில் பிரசித்திபெற்று விளங்கிய காத்தான்கூத்து, கண்டி யரசன் நாடகம் முதலியவற்றிலேயிருந்து பாடல் மெட்டுக்களை அவர் கையாண்டமை பாரம்பரியக் கலைவடிவிலே அவருக்கு உள்ள ஈடுபாட் டினையே காட்டுகின்றது. சமயப்பற்றும் கலையுணர்வுமுடைய கவிஞர் புனித பிரான்சிஸ் சவேரியாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இக்கூத்தினைப் பாடியுள்ளார்.

ஈழத்தில் நிகழ்ந்த கத்தோலிக்க மதப்பரப்புதலும் அதன் பக்க விளைவுகளுமே இக்கதையின் ஊடுபாவாக ஓடுகின்றது. நல்லதொரு மேடை நிகழ்வுக்குரிய பல அமிசங்களை வித்துக்கள் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆசிரியர் இக்கூத்தின் கதைக்கு மூலாதாரமாக யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபை சரித்திரச் சுருக்கம் எனும் தமிழ் நூலையும் சுவாமி ஞானப்பிரகாசரின் (A History of the Catholic Church in Ceylon) என்னும் நூலையும் பயன்படுத்தியுள்ளார்.

சங்கிலியரசனின் மகன் ஒருவன் மதம் மாறிய கதை பலருக்குத் தெரியாது. சுவாமி ஞானப்பிரகாசரின் நூலிலே (P. 47) மேற்காட்டிய மதமாற்றம்பற்றிய தகவல் கிடைக்கின்றது. முற்கூறிய தமிழ் நூலிலும் (பக். 4, 5) இத்தகவல் காணப்படுகின்றது.

அண்மையிலே பேராசிரியர் ஆ. பி. அந்தனி இராசு பதிப்பித்த (ஈழத்தில் எழுந்ததாகக் கருதப்படும்) அர்ச். சவேரியார் அம்மானை என்னும் நூலிலும் (பக். 73) சங்கிலி அரசனின் மகன் ஒருவன் மதம் மாறியமையும் அதனாலே கொலையுண்டமை பற்றிய தகவலும் கிடைக்கின்றது.

ஈழநாட்டிலே செழுமை பெற்றுவந்த கத்தோலிக்ககூத்து மரபிலே வித்துக்களுக்கும், கூத்துகள் எழுதிய புலவர்கள் வரிசையிலே தேவதாசனுக்கும் முக்கியமானதோர் இடமுண்டு எனத் துணிந்து கூறலாம்.

கத்தோலிக்க இலக்கியங்களுக்கும், கலை நிகழ்வுகளுக்கும் ஊக்கம் கொடுத்துவரும் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையவர்களின் அனுசரணையுடன் இந்நூல் வெளிவருகின்றது. இவர்களின் பணிதொடரவேண்டும்.

எனது மதிப்பிற்கும் செழுமைதழுவிய நட்புக்கும் பாத்திரமான வண. பிதா கலாநிதி அ. சந்திரகாந்தன் அவர்கள் கத்தோலிக்க கலை இலக்கிய நடவடிக்கைகளிலே என்னை ஈடுபாடுகொள்ளச் செய்தவராவர். அவருக்கு எனது நன்றிகள் என்றும் உரியதாகும்.

கவிஞர் தேவதாசன் ஈழத்துக் கூத்து மரபுக்குச் செழுமை சேர்க்க இன்னும் அயராது உழைக்கவேண்டுமென அவாவுறுகிறேன்,

# ஆசியுரை

''இறைவனின் வார்த்தையாகிய விதை நல்ல நிலத்தில் முளைத்து இறைப்பணியால் நீர் பெற்று. வளர்ந்து, சாற்றை உறுஞ்சுகிறது; முடிவாகப் பெருங்கனி கொடுக்கும்படி அச்சாற்றை உருமாற்றித் தன் மயமாக்குகிறது'' (மறை அறி. பணி. 22)



''வித்துக்கள்'' என்ற தலையங்கத்தின் கீழ், புனித சவேரியார். மன்னார் வேதசாட்சிகள் தொடர்பான சரித்திரம் தென்மோடி நாட்டுக்கூத்து வடிவத்தில் வெளியாகுவதை வரவேற்று ஊக்கமளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது இரட்சணிய சரித்திரத்தில் கடவுள் எம்மத்தியில் நடாத்திய ஒரு முக்கிய சம்பவம் என்னவெனில் அவருடைய வார்த்தை மிசனறிமார்களினால் எமதுநாட்டில் போதிக்கப்பட்டதும், அதை ஏற்க எம்நாட்டு விசுவாசிகள் நடாத்திய பலிகளுமாகும். புனித பிரான்சிஸ் சவேரியாரும் மன்னார் வேதசாட்சிகளும் இவ்வகையில் முக்கியத்துவம் பெற்றவர்கள்,

இச்சம்பவங்களை எமக்கேற்ற கலை கலாச்சாரம் வழங்கும் பல உருவங்களில் நினைவு கூருவது எமது விசுவாச வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் ஏதுவாக அமையும். அதிலும் நாட்டுக்கூத்து உருவத்தில் இதை மேடை ஏற்றுவது எம் மக்களின் ஆன்மாவின் ஆழத்தைக் கைப்பற்றுவதாகும்.

''இவ்வாறு செய்யும்போது ... அந்தப் பண்பாட்டின் மனப்பாங்கிற்கும் இயல்பிற்கும் தக்கமுறையில் கிறிஸ்தவ வாழ்வு தழுவியமையும்''

( 6வது சின்னப்பர் கம்பலா, ஆபிரிக்கா 1964 )

கவிஞர் தேவதாசன் அவர்கள், அதி வண. ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களாலும் அருட்திரு பிலிப் பொன்னையா அடிகளினாலும் உந்தப்பட்டு, மேற் கூறிய சம்பவத்தை தென்மோடி நாட்டுக்கூத்து வடிவத்தில் தருகின்றார். ஏற்கனவே ''காத்தவன் காவியம்'' என்ற தலைப்பில் இவர் வெளியிட்ட யோசவ்வாஸ் முனிவரின் காவியம் எம்மை மகிழ்வித்தது. அதேபோல இந்த நாட்டுக் கூத்தும் தமிழ் கிறிஸ்தவ சமூகங்கள் மத்தியில் விசுவாச உணர்ச்சியையும் ஊக்கத்தையும் தூண்ட வல்ல கருவியாக அமைவதாக.

இக்கூத்தை நமது குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ்மன்ற மாணவர்கள் மேடையேற்றுவதில் பெருமைப்படு கின்றோம்.

''பிள்ளையின் வளர்ச்சியில் பெற்றோரின் மகிழ்ச்சி
கலை வளர்ச்சியில் கடவுளின் மகிழ்ச்சி''

அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவேல்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
13-03-1990

# ஆக்கியோனின் அன்புரை

''நாட்டுக்கூத்து எங்கள் நாடகப் பாரம்பரியத்தின் அடிப்படை, நவீன நாடகங்களையும் செழுமைப்படுத்தும் ஊற்றுக்களைக் கொண்டது'' என்று எனது முதலாவது நாட்டுக்கூத்து நூலாகிய புனித பிரான்சீஸ் அசிசியார் நூலுக்கு அணிந்துரை வழங்கிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் கூறினார்கள்.

போத்துக்கேயர் 1505 ஆம் ஆண்டில் ஈழத்தில் காலடி வைத்தனர். அவர்கள் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவும், கீழைத் தேயங்களில் தமது வணிகத்தை மேலோங்கச் செய்வதற்காகவும் தமது சுவடுகளை ஈழ மண்ணில் பதித்தனர்.

கிறிஸ்தவ இலக்கியப் பரம்பலில், ''அம்மானையே'' முதல் முதல் எழுந்த இலக்கிய வடிவமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் தெல்லிப்பளை என்ற கிராமத்தில் வசித்த பேதுறு புலவரால் கி. பி. 1647 இல் எழுதிய அர்ச். சந்தியோகுமையோர் அல்லது யாகப்பர் அம்மானையே இவ்விலக்கிய வடிவத்தில் முதலிடம் பெறுகின்றது.

இந்த அம்மானையைத் தொடர்ந்தே ''வசன வாசாப்பு'' என்கின்ற எதிர் எதிரே, இரு மேடைகள் அமைத்து கேள்விக்கு பதில் கூறுகின்றதைப் போலவும், வாதங்கள் இடுவதைப்போலவும் வசன வாசாப்பு கிறிஸ்தவ இலக்கியத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

''அம்மானை'', ''வசன வாசாப்பு'' என்ற இலக்கிய வடிவங்களை அடுத்து மூன்றாவது இடத்தை, கிறிஸ்தவ இலக்கியத்தில் ''தென்மோடி நாட்டுக்கூத்துக்கள்'' பெற்றன.

இந்த நாட்டுக்கூத்துக்களை கி. பி. 16-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்த யேசு சபையைச் சேர்ந்த கத்தோலிக்க மத குருமாரே ஈழநாட்டில் அறிமுகம் செய்தனர். புளசந்தோரம் (*Flossanctorun*) போர்த்துக்கேய நூலில் (அடியார்கள் வரலாறு) கூறப்பட்ட புனிதர்கள் வாழ்க்கையை நாடகமாக்கி நாட்டுக்கூத்தை மேடையேற்றினர். இதுவே பிற்காலத்தில், யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டப்பாங்கு நாட்டுக் கூத்துக்களில் ''புலசந்தோர்'' வருகை என காணப்பட்டது.

இந்த நாட்டுக்கூத்துக்கள் காலத்துக்குக் காலம் மேடையேற்றப் பட்ட போதிலும், அச்சுவாகனம் ஏறாத நிலையிலேயே காணப்பட்டன. இவற்றை அச்சுவாகனம் ஏற்றும் பணியில், நாட்டுக்கூத்து இலக்கியத் துக்கு முதல் முதலில் பணியாற்றியவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச ரின் வளர்ப்புத் தந்தை ச. தம்பிமுத்துப்பிள்ளை என்பதை எவரும் ஏற் றுக்கொள்ளுவார்கள்.

அதன்பின் இந்த நாட்டுக்கூத்துக்களை அச்சுவாகனம் ஏற்றும் பணிக்கு ஊக்கம் அளித்தவர், காலஞ்சென்ற, நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு அவர்களேயாகும். அதன்பின்ர் சமாதான நீதவானாகவும், ஆசிரியராகவும், புலவராகவும் விளங்கிய மு. வி. ஆசீர்வாதம் அவர்கள் தனது அச்சகத்தில், ''தேவசகாயம்பிள்ளை'' ''எஸ்தாக்கியார்'', ''விசயமனோகரன்'', ''மரியதாசன்'' என்ற நாட்டுக்கூத்து நூலையும், தனது நூலாகிய ''மனம்போல் மாங்கல் யத்தையும்'' அச்சுவாகனம் ஏற்றினார்.

காலஞ்சென்ற பேராசிரியர், சு. வித்தியானந்தன் அவர்கள், அரசாங்கத்தின் உதவியுடனும் வேறுதனியார் நிறுவனர்களின் உதவி யுடனும் மன்னார் மாவட்டத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் இருந்து நாட்டுக்கூத்து இலக்கியங்களை நூலுருவம் செய்வதற்கு முயற் சித்தது போற்றுதற்குரியதாகும். இவற்றில் மன்னார் மாவட்டத்தில் ''என்டிறீக்கெம்பரதோர்'' ''மூவிராசாக்கள்'' ''ஞானசௌந்தரி'' என்ற நாட்டுக்கூத்துக்களை, மன்னார் மாவட்ட கலாச்சார சபையின் சார்பில் வெளியிட்டார்கள். இவற்றுக்கு உதவி புரிந்தவர்கள், நானாட்டானில் வாழ்ந்த புலவர் பெஞ்சமின் செல்வமும், நறுவலிக்குளத்தில் வாழ்ந்த மாதோட்டக் கவிஞரும்வைத்தியரும், ஆசிரியருமான செபமாலை மொத்தம் போல் என்ற இருவருமாகும். அத்துடன் மட்டக்களப்பு கலாச்சாரப் பேரவையின் உதவியுடன் நாட்டுக்கூத்து நூலையும் வெளியிட்டார்கள். மட்டக்களப்பில் அனுவுருத்திரா நாட்டுக்கூத்தை வெளியிட்ட பெருமை, வித்துவான் வீ. சி. கந்தையாவை அவர்களைச் சார்ந்ததாகும்,

பேராசிரியர் அ, சண்முகதாஸ் அவர்களால் வெளியிடப்பட்ட ''துணைவேந்தர் வித்தி'' என்ற நூலின் பக்கம் 79-ல் குறிப்பிட்ட வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுந்த ''அலங்கார ரூபன் நாட்டுக்கூத்து'' மன்னார் மாவட்டத்தில் எழுந்த ''எண்டிறீக்கு எம்பரதோர்'' நாட்டுக்கூத்து'' ''ஞானசவுந்தரி நாட்டுக்கூத்து'' ''மூவிராசாக்கள் நாட்டுக்கூத்து'' ஆகியவை காலஞ்சென்ற பேராசிரியர்

சு. வித்தியானந்தனால் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகள் அவரால் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களின், உதவியுடனும், வேறு தனியார் ஸ்தாபனங்களின் உதவியுடனும், ஏட்டில் இருந்த பிரதிகளை அந்த மாவட்டத்தில் வாழ்ந்த புலவர்களைக் கொண்டு எழுத்துருவுக்கு கொண்டு வந்து, மேற்படி நாட்டுக்கூத்து நூல்களை பதிப்பித்தாரேயொழிய, அவற்றை ஆக்கவில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

''எண்டிறீக்கு எம்பரதோர்'' நாட்டுக் கூத்து மாதோட்டப் புலவர் கீத்தாம்பிள்ளையாலும், ''ஞானசவுந்தரி'' நாடகம் சூசைப்பிள்ளை மரிசாற்பிள்ளையாலும் பாடப்பட்டதாகும். ஏனைய நூல்களை எழுதிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

''தமிழர் பாரம்பரிய கலைகளைப் பாதுகாப்போம்'' என்ற பாரிய நோக்குடன் இயங்கிவரும், யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தவத்திரு – தனிநாயகம் அடிகளார் பெயரில் இயங்கிவரும், தமிழ் மன்றத்தின், தலைவர் சகோதரர் சூசைப்பிள்ளை ஜோர்ஜ் என்பவரும், உப தலைவர் சகோதரர் செபமாலை ஸ்ரீபன் ராஜ் என்பவரும் ஒருநாள் எனது வீடு தேடி வந்து ஒரு நாட்டுக்கூத்தை எழுதித் தரும்படிஎன்னைத் தயவாகக் கேட்டார்கள். இந்த அன்பு வேண்டுகோளால் இந்நூல் என்னால் ஏறக்குறைய பதினாறு மணித்தியாலங்களுக்கிடையில் ஆக்கப்பட்டதெனலாம்.

எனது அரசாங்க கடமை காரணமாக, நூல்களை ஆக்கித் தரும்படி கேட்போரிடம் சில நிபந்தனைகளை நான் விடுவதுண்டு. அது எனது தற்பெருமையாலல்ல. என்னால் சில வேலைகள் எனது வீட்டில் வைத்துச் செய்யமுடியாதென்ற காரணத்தினாலேயாகும்.

எனது முதலாவது நாட்டுக்கூத்து, தற்பொழுது, மடுத்திருப்பதியில் பங்குத் தந்தையாக இருக்கும் வண. பிதா. பே. யேசுராஜா அடிகளாரின் உதவியில், நான் வவுனியா கச்சேரியில் கடமையாற்றும் போது, புனித அந்தோனியார் ஆலய பங்கு அறையொன்றில் இருந்து எழுதப்பட்டது.

இரண்டாவது நூலாகிய ''காத்தவன் காவியம்'' தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி மறை மாவட்ட ஆயர். மேதகு தோமஸ் பெர்னாண்டோ அவர்களின் உதவியால், திருச்சிராப்பள்ளி தூய சின்னப்பர்

குருத்துவ கல்லூரியில் வைத்தும், திருச்சிராப்பள்ளி தமிழ் இலக்கிய கழக அறையில் வைத்தும் எழுதப்பட்டது.

மூன்றாவது நூலாகிய ''பாமகுடம்'' குறுகிய நான்கு மணித்தியாலத்தில் எனது வீட்டில், எனது பிறந்தகமாகிய பாஷையூரில், தமிழ்நாட்டு முதலமைச்சர், எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் சிலை திறப்பு விழாவுக்கு அஞ்சலியாக எழுதப்பட்டு, பாடப்பட்டபின், ''பாமகுடம்'' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

உங்கள் கையில் தவழும் இந்த நூல் ஏறக்குறைய பதினாறு மணித்தியாலயங்களில், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் வைத்து எழுதப்பட்டதாகும். இதற்கு உதவி புரிந்த, கல்லூரி அதிபர் எஸ். ஜே. இம்மனுவேல் அடிகளாருக்கும், நாடகத்தை ஆக்கித்தர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த வண. பிதா கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

இந்த நாடகத்தில் ''காப்பு விநத்தமான'' எண்சீர் விருத்தத்தில் சூடாமணி நிகண்டில் கூறப்பட்டதாகிய சீர், மணி, பரிதி, யானை திரு, நிலம், உலகு, திங்கள், கார், மலை, சொல், எழுத்து, கங்கை, நீர், கடல், பூ, தேர், பொன்'' என்ற பதினெட்டு மங்கலச் சொல், ஒன்றிலும், நிகண்டில் கூறப்பட்ட, எட்டுக் கணங்களாகிய நீர்க்கணம், நிலக்கணம்'' தேயுகணம், சந்திரகணம், ஆகாயக்கணம்' இயமானக் கணம், வாயுகணம் என்பதில் தீயகணங்கள் யோக நல்ல கணமாகிய மூன்று நேரசையில் தொடங்கும் ''பூபோற்றும்'' என்ற இயமான கணத்தில் இக்காப்பு விருத்தம் புதிய முறையில் பாடப்பட்டதை குறிப்பிட விரும்புகிறேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தொடங்கி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்வளர்ப்புத்தந்தை தம்பிமுத்துபிள்ளை வரையும் இந்து ஆலயங்களில் திருவூஞ்சல்களிலும், சீர்பூத்த ஏர்பூத்த ''சீரோங்கும்'' ''ஏரோங்கும்'', என்ற நிகண்டில் காட்டப்பட்ட மங்கலச் சொல்லை பின்பற்றியே காப்பு முதல் சொல் இயமான கணத்தில் வருகின்றது. இதைப்பின்பற்றியே நானும் இயமான கணத்தில் பதினெட்டு மங்கலச் சொல்லில் ஒன்றை எடுத்து நேரசையில் பூபோற்றும் என்று, புதிய முறையைத்தோற்றியுள்ளேன்.

இந்த நாடகம், கிறிஸ்தவ நாட்டுக்கூத்தில் வரும், சிறந்த முத்தான இராகங்களை வைத்து என்னால் பாடப்பட்டது. இவை எனது முப்பத்தேழு வருடங்களின் அனுபவமென்றே கூறலாம். அத்

துடன் இந்நாடகத்தில் ''எண்சீர் விருத்தம்'' ''கவி'' ''கொச்சகம்'' ''சந்தக விருத்தம்'' ''கலித்துறை'' ''அகவல்'' ''ஆசிரியம்'' போன்றவைகளும் ''கவி நெடில்'' என்று கூறப்படுகின்ற, பதினாறு சீர்களில் வைத்து எழுதப்படுகின்ற ''ஆசிரியப்பா'' போன்றவைகளும் இடம் பெறுகின்றன.

இந்த நாடகத்தில் வருகின்ற தாளங்கள், இராகங்கள், மெட்டுக்கள், பழைய நாடகப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். நான் சங்கீதம் படித்தவனல்ல. ஆனால், சிறு வயது தொடக்கம் நாட்டுக் கூத்துக்களை பாடியும், ஆடியுமான அனுபவத்தினால் இவைகளைக் கண்டுபிடித்தேன்.

தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றாகிய, ''காத்தான் கூத்து'' மெட்டுக்கள் இன்று வரையும் கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களில் சேர்க்கப்படவில்லை. இக்குறையை நிவர்த்தி செய்யும் பணியை போக்குவதற்காக இந்த நாடகத்தில் ''காத்தான் கூத்து'' மெட்டு இரண்டை புகுத்தியுள்ளேன்.

இந்த நாடகத்தில் வரும் மூலக்கரு, பல வரலாற்றுப் புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டவையாகும். முக்கியமாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய 'யாழ்ப்பாணச் சரித்திரம்,' வண பிதா. எஸ். ஜி. பெரேரா அவர்களால் எழுதப்பட்ட இலங்கைச் சரித்திரத்தில் ''கிறிஸ்தவர்களின் படுகொலை'' வித்துவான் வ. கந்தையாவால் எழுதப்பட்ட ''சங்கிலியன்'' என்ற நாடகப் புத்தகம், வண. பிதா. வ. ஞானப்பிரகாசர், வண. பிதா. ம. பாவிலுப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட ''இலங்கையின் கத்தோலிக்க சரித்திரம்'' என்ற நூல்கள் உறுதுணையாகவிருந்தன.

தற்காலத்தில் நாட்டின் நிலைமைக்கேற்ப, முற்காலத்தைப் போல் ஒரு இரவுக்கூத்தாக நாடகங்களைமேடையேற்ற முடியாது, இதை நிவர்த்தி செய்ய, இந்நாடகத்தை இரண்டு (2) மணித்தியாலங்களுக்குள் மேடையேற்றக்கூடிய முறையில் இவற்றை எழுதியுள்ளேன்.

இந்நாடகம், வருங்கால நாட்டுக்கூத்தை எழுத முற்படும் எழுத்தாளருக்கு ஒரு கைநூலாக உதவுமென்ற நம்பிக்கை எனக்குண்டு. அத்துடன், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழக மட்டத்தில் குறுகிய கால நேரத்தில் மேடையேற்றக்கூடிய விதத்திலும் இதை அமைத்துள்ளேன்.

கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களை பாடிய புலவோர்கள் பலர் பாடசாலைப்பக்கம் தலைவைத்துப் படுக்காதவர்கள், ஆனால் அவர்கள் எழுதிய நாட்டுக்கூத்துக்களில் ''யாப்பு முறைகள் செறிந்து காணப்படு கின்றன. இந்த யாப்பு முறைக்கு, எவரும் இலக்கணம் வகுக்கவில்லை. இவற்றை நிவர்த்தி செய்ய, யாப்பறிந்த இலக்கண வல்லுனர்கள் இவற்றுக்கு இலக்கணம் எழுதுவார்களேயானால், கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்களின் அமைப்பு முழுமைபெற்ற இலக்கண வடிவமாகி விடும்.

கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கு, ஏறக்குறைய கடந்த ஐந்து நூற் றாண்டுகளாக, ஒரு தனித்துவமான பாரம்பரியம் உண்டு. இக் கலையைக் காப்பாற்றிய பெருமை, சாதாரண, விவசாய, தொழிலா ளர் வர்க்கத்தையே சார்ந்ததாகும். அத்துடன் இக்கலையை ஊக்க மளித்து மேலும், வளர்க்கின்ற பெருமை, கத்தோலிக்க மதகுரு மாரையே சேர்ந்ததாகும்.

எனவே, இன்று நாட்டுக்கூத்தில், நவீனத்துவம் செய்ய விரும்பும், புத்திஜீவிகள். இக்கலைக்குள் புகுந்து அவற்றை ஊடுருவல் செய்யாமல் இருத்தலே, அவர்கள் எமக்கு செய்யும் அளப்பரிய நன்மையாகும.

இந்த இலக்கிய வடிவம், மீண்டும் புத்துயிர் பெற்று, தொழி லாளர் வர்க்கத்தினரால் மேலும் காப்பாற்றப்பட வேண்டும். அப்படி காப்பாற்றப்படும்போது, வருங்கால சந்ததியினரும், மாணவ மாணவி களும், இதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவார்களென்ற நம்பிக்கை எனக்குண்டு.

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்கும் புதிய உயிர் தருவோனாகின்றான் என்ற பாரதியாரின் மேற்படி கருத்துக்கிணங்கவும் ''மக்களிடம் படிப்பது. அதை மக்க ளுக்கே திருப்பிக் கொடுப்பது" என்ற கொள்கையில் பேனாவை தூக்கியவன் நான் என்ற காரணத்தாலும், இந்த தென்மோடி நாட்டுக் கூத்தை சாதாரண தொழிலாளர், விவசாய மக்களுக்கு எழுதினேனே யொழிய, பண்டிதர்களுக்கு எழுதவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்

இந்த நூலுக்கு, ''வித்துக்கள்'' என்ற பெயரைச் சூட்டிய புனித. பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி, இறையியல் பேராசிரியர், வண பிதா. கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாருக்கும், இந்நாடகத்துக்கு தகுந்த இராகங்கள் தந்த பாஷையூரைச் சேர்ந்த அண்ணாவியார் வஸ்தியாம்பிள்ளை அல்பிறட் அவர்களுக்கும், நாடகத்தின் நெறியாள்கையில் பங்குகொண்ட, ''கண்டி அரசன்'' ''தீர்க்க சுமங்கலி'' போன்ற பல வெற்றி நாடகங்களை ஆயிரம் மேடைக்கு மேல் மேடையேற்றிய பாஷையூர் வளர்பிறை மன்றத்தின் முக்கிய அமைப்பாளரான, அன்ரனி பாலதாஸ் அவர்களுக்கும், மன்னார் மாதோட்ட பாங்கு ஆட்டங்களை இந் நாடகத்தில் அறிமுகம் செய்த, வண. பிதா ஜெறோம் லம்பேட் அ. ம. இ. அடிகளாருக்கும், இந் நாடகத்தை ஆய்வு செய்த, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா அவர்களுக்கும், ஏனைய இந்நாடக ஆக்கத்துக்கு உதவிய எல்லோர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

''வித்துக்கள்'' என்ற பெயரோடு, நாட்டுக்கூத்து முத்துக்களின் எழிலை ரசிப்பதற்கு உதவிய எனது பிறந்த பொன்னாடாகிய, மணற்றிடல் பாஷையூருக்கும் நன்றிகள். இது எனது சொத்து, இதை நித்தம் சுவைத்து, நாடுகள், ஏடுகள், வீடுகள் எல்லாம் பரவ நாடகப் பிரியர்கள் உதவுவார்களென்ற நம்பிக்கையுடன் எனது அன்புரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

தங்கள் இலக்கியச் சேவையிலுள்ள
**கவிஞர் தேவதாசன்**

'' அனலாஸ் ''
இல. 35/4 இரண்டாம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.
1989-12-25

# அங்கம் 1

இடம் : யாழ்ப்பாண இராச்சியம். தலைநகர் — நல்லூர்.

காலம் : கி. பி. —1509 — 1521

பங்கு கொள்வோர்கள் : முரசறிவிப்பவன், பொதுமக்கள்

நிலைமை : யாழ்ப்பாண இராச்சியத்தின் பேரரசன் சங்கிலியன் அல்லது செகராசசேகரன் கொலு வருதல் பற்றி முரசறிவிப்பு

இராகம் : பூரிகல்யாணி

தாளம் : ஏகம்

மெட்டு : மரியதாசன் நாடகம் — பக்கம் — 2

சொல்வேன்! சொல்வேன்! நானாண்டே — எந்தன்
    சொந்தத் தொழிலது தானாண்டே
நில்லேன்! நில்லேன் நீயாண்டே — இந்த
    நிருப வாசகம் கேளாண்டே

சொல்வேன் ...

பறங்கியர் கரவுடன் வந்தாச்சே — எம் தன்
    பசுக்களும் ஆடுகள் சந்தாச்சே!
இறந்தவர் எல்லாம் வெந்தாச்சே — வீர
    இளைஞர் தலைகளும் பந்தாச்சே!

சொல்வேன் ...

தெருக்கள் அருகில் கூடிடுவீர் — நீங்கள்
    தெள்ளு தமிழினில் பாடிடுவீர்
தருக்கள் இசைத்துமே ஆடிடுவீர் — மன்னன்
    தலைதனில் மாலைகள் சூடிடுவீர்

வசனம்

மகாஜனங்களே! எமது யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் சங்கிலியன், நாட்டு வளப்பம் கேட்பதற்கும், குடிகளின் குறை' நிறைகள் அறிவதற்காகவும் கொலு வருகிறார்.

பராக்! பராக்!!

# அங்கம் 2

இடம் : யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் நல்லூர்

பங்குகொள்வோர் : கந்தரோடை அதிபதி அப்பா முதலி
தளபதி — மாணிக்கத்தேவன்
சங்கிலியன் செகராசசேகரன்

நிலைமை : சபைவரவும், நாட்டு வளப்பமும்

அதிபதி அப்பா முதலி வரவு

இராகம் : எதுகுலகாம்போதி — தாளம் : அடதாளம்

மெட்டு : கண்டியரசன் நாடகம் — பக்கம் – 7

அலையோடும்! எழில்மேவும்! நகரமாம் — மக்கள்
அறிவிற்கு அகிலத்தில் சிகரமாம் — எங்தும்
கலைபாடும் மாடங்கள் கானங்கள் கேட்டிடும்
கனிகாணும் புரத்துக்கு ஏகுவேன் நானே

அறிவிக்கும் தொழில் கொண்ட மேதையோன் – வேந்தன்
ஆபத்து நீக்குமோர் பாதையோன் — இந்த
செறிவுற்ற மலர்சூழ்ந்த செங்கோண்மை தவறாத
செம்மைசேர் மனத்தோனை தேடியே! செல்வேன்

முறைப்பாட்டை விளங்கவோ விட்டாரோ — எம்தன்
முதலீட்டில் யாரேனும் தொட்டாரோ — அந்தக்
குறைதன்னைப் பிடித்துமே குடிமக்கள் மகிழவே
குறிப்புக்கள் கைக்கொண்டு செல்லுவேன் இப்போ

தளபதி மாணிக்கத்தேவன் வரவு

இராகம் : அம்சத் தொனி — தாளம் : ஆதி

மெட்டு : எஸ்தாக்கியார் நாடகம் — பக்கம் – 9

யாழ் நாட்டில்! அன்னியர் வந்துமே
யானை மானையும் களவு செய்தாரோ
ஆழ்நீரில் கப்பலைச் செலுத்தியே
அரபு வணிகரும் முத்தினை சேர்த்தாரோ!

போர்கள் பலது செய்து
பேர்கள் அதிகம் கொண்ட
வீர மன்னவனின் தளபதி நானே!

அரண் கொண்ட ஈழ மண்ணிற்கு
ஆயுதம் தன்னை வாங்க! அழைத்தாரோ!
தரமிக்க நெல்லுத் தன்னையே
தரகர் வந்துமே விலைகள் குறைத்தாரோ!

வளங்கள் உடைய வல்லோன்
தளங்கள் நிலைமை தன்னை
விளக்கி மகிழ்ந்திடவே விரைந்திடு வேனே

சதிசெய்து அமைச்சர் கூட்டமே
சனங்கள் தன்னையும் துரத்தி விட்டாரோ?
மதிகொண்ட வேந்தனும் காணவே
மகிழ்ச்சி பொங்கிட விரைவில் ஓடுவேன்

தரையில் படைகள் கொண்டோன்
நிரையில் குடைகள் கண்டோன்
உரையில் கலப்பதற்கு நாடுவேன் இன்றே

**சங்கிலியன் வரவு**

**இராகம் :** மோகனம் **தாளம் :** ஆதி

**மெட்டு :** கண்டியரசன் நாடகம் — பக்கம் - 8

வானோடும்! கொடிகளே! ஆட்சி! ஏற்றமே!
கோனோடும்! முடிகளே சாட்சி! சாற்றுமே!
தானோடும்! வெடிகளே! காட்சி! தோற்றமே!
பானோடும்! குடிகளே: மாட்சி போற்றுமே!

செல்வம் உயர்வு கொண்ட
நல்லூர் பதியில் வாழும்
வல்ல சேனை கண்ட — வேந்தனும் நானே

சிங்களப் படைகளில் சிரங்கள் வெட்டினோம்
தங்கிய அடையலர் கரங்கள் கட்டினோம்
எங்கையில் இடையிரு சரங்கள் தட்டினோர்
சங்கா ரமென்றது முரசு கொட்டினோம்

பறங்கிப் படைகள் தன்னை
இறங்கி ஓடச் செய்யும்
அறங்கள் காத்து வாழும் — அரசனும் பாரீர்

படிதனில் மன்னவர் சிறையில் பூட்டுவேன்
கடிதனில் அன்னவர் குறைகள் காட்டுவேன்
குடிகளின் இன்னலும் நிறையில் ஓட்டுவேன்
முடியுடை முன்னவர் முறையில் மாட்டுவேன்

மண்ணில் மக்கள் காக்கும்
விண்ணில் தேவர் போற்றும்
பண்ணில் பாடும் இந்த பார்த்திபன் நானே

அனு : நந்திக் கொடிகொள் யாழரசை ஆளுவேன்.

## தளபதி மாணிக்கத்தேவர் சந்தக விருத்தம்

சென்னியில் முடியுடை செவ்விய கொடியுடை
செந்தமிழ் காவலனே!
செழிப்புயர் செல்வமும்! செம்மைகொள் ஆட்சியும்
சேனையும் உடையோனே!

மின்னிய தாரணி மிகுவெழில் சீரணி
மித்திரர் போன்றவனே
மிக்கவர் போற்றிட தக்கவர் ஏற்றிட
மீட்சி செய் புரவலனே!

வன்னிய நாட்டவர் வணங்கிடு பெருமைகொள்
வளமுறு புரத்தவனே!
வானவர் அடிதொழு வதனமும் மலர்ந்திடு
வழுத்திடு விபரமிப்போ

வசனம்

தாழ் பணிந்தேன்! மன்னா அடியேனை அழைத்த காரியத்தை தெரிவிக்க வேண்டும் அரசே.

சங்கிலியன், அதிபதி அப்பா முதலி, தளபதி மாணிக்கத் தேவர்

ஆலோசனைத் தரு

இராகம் : பரசு தாளம் : அடதாளம்

மெட்டு : மரியதாசன் நாடகம் — பக்கம் — 7

சங்கிலியன் :

நாமகளது! ஆசியே! கொண்டவா!
நற்குணமிகு! நல்லோனே கேளும்!
பூமகளது! பாதங்கள் காணுதோ!
புகலுவீர் நானும் கேட்டிட இப்போ!

அதிபதி அப்பா முதலி :

செய்பயிர்களும்! நன்றாக வளருதே!
செழிப்புள்ள இந்த நாட்டினில் என்றும்
பெய்மழைகளும் தவறாமல் தோன்றுதே
பெருகுதே செல்வம் மண்ணது மீதில்!

சங்கிலியன் :

போரிலே புகழ் தங்கிய வில்லோனே!
பொன்மணிகளை கவனமாய்க் காப்பாய்
நீரிலேகலம் தன்னையும் தண்டஞ் செய்யும்
நிலையையே நன்கு உரைத்திடு செல்வா!

தளபதி மாணிக்கத் தேவர் :

தரைப் படைகளும் மற்றுமே மண்ணிலே
தரத்திலே உயர்கொண்டதாய் எண்ணும்
திரையிலே பெரும்கப்பலும் ஓடுதே
திசையெல்லாம் உந்தன் பெயரது பாடும்

சங்கிலியன் :

நாட்டிலே! வளமானதை! கேட்டேனே!
நானிலமதில் மகிழ்ச்சியே கொண்டேன்
வீட்டிலே! வாழும் பெண்குலம் தன்னையே
விளக்குவீர் நானும் கேட்டிட நன்றாய்!

அதிபதி அப்பா முதலி :

மாதர்கள் குணமாண்பதை பற்றியே!
மன்னவா! இத்தரைதனில் சொல்வேன்
வேதங்கள் பலஉரைத்திடு முறையேதான்
வேந்தனே! இல்லாள் இருப்பது உண்மை

சங்கிலியன் :

அரிவையோர் கற்பு நெறியையும் அறிந்திட்டேன்
ஆனந்த மனமானதைப் பெற்றேன்
விரிவாகத் தளநிலைகளின் விபரமே
வில்லவா! சற்று விளக்கிடு அன்பாய்

தளபதி மாணிக்கத்தேவர் :

அறுவகைப்படை தன்னையே வைத்துமே!
அரசனே! இந்நிலத்தையும் காப்பேன்
மறுவதே பதிதன்னிலே கண்டாலே
மானமே! போகும் நீதியும் இதுவே!

தளபதி மாணிக்கத்தேவர் :

ஏந்தலே! எமது யாழ்ப்பாண இராச்சியத்தின் தரைபடு வளங்கள் பற்றியும், கடல்படு வளங்கள்பற்றியும், நாட்டின் பெண்கள் ஒழுக்கம் பற்றியும் கந்தரோடை, அதிபதி அப்பா முதலி அவர்கள் கூறினார்கள். நானும் நாட்டின் படைத்தளங்கள் பற்றி விரிவாக உரைத்தேன்.

சங்கிலியன் :

அதிபதி அப்பா முதலி அவர்களே! தளபதி மாணிக்க தேவர் அவர்களே! தாங்கள் எமது நாட்டு வளங்களை கூறியமைக்காக, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். அத்துடன் ........ போர்த்துக்கல் நாட்டிலிருந்து பறங்கியர் பட்டாளம் வியாபாரத்தைப்

பெருக்குவதற்காகவும், தங்கள் கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதற்காக வும், பாரத நாட்டில் தூத்துக்குடி துறைமுகத்தில் வருகை தந்ததாக வும் கேள்விப்பட்டேன். எல்லைகளை கவனமாய் பாதுகாருங்கள் சரி சென்று வாருங்கள்.

# அங்கம் 3

இடம் : பிரான்ஸ் தேசத்தின் பரீஸ் பல்கலைக் கழக வளாகம்

பங்குகொள்வோர் : இளைஞன் சவேரியார், அவரது நண்பன் சாமுவேல், உடன் மாணவி டயானா.

காலம் : 1509 — 1521

நிலைமை : இளைஞன் சவேரியாரும், அவரது நண்பன் சாமுவேலும், உடன் மாணவி டயானாவும் பட்டமளிப்பு விழா நடந்தபிற்பாடு பெருமிதத்துடன் வெளிவருகின்றார்கள்.

இராகம் : தோடி　　　　தாளம் : ரூபகம்

மெட்டு : எஸ்தாக்கியார் நாடகம் — பக்கம் - 16

சவேரியார்

சந்திர! சுந்திர! இந்திர! பாவைபார்!
　　சாரலின் குளிர்காற்றோ எதிரே
சிந்தது பாடியே விந்தை உலகிலே
　　சிறப்புடன் ஆடிடுவோம் சதுரே

சாமுவேல்

பட்டமும்! திட்டமும்! தட்டியும் விட்டோமே
　　பல்கலைக் கழகமதில் — பண்பதாய்
வட்ட நிலாமுக! தொட்டால் சுவைக்குமே
　　வனிதையர் வருவதுபார் நண்பனே!

டயானா

புதுமலர்! இதுவது! முதுபதி! தன்னிலே
　　பூமகள் தந்திடுவேன் — தேனாக!
மதுவையும் குடித்துமே மதிமுகம் மாறியே
　　மங்கையும் துள்ளிடுவேன் மானாக!

சவேரியார்

அஞ்சுக! மஞ்சுக! வஞ்சி! மணியாளே
‘‘அதுவொன்று’’ தந்துவிட்டால் — போதுமே
பஞ்சு! உடல்கண்டு! நெஞ்சு மகிழ்ந்திட்டேன்
பனிதவழ் மலரதுதான் பாதமே

சாமுவேல்

பல்லொளி! சொல்மொழி! கொல்விழி! கொண்டாளே
பாட்டினில் மையவிட்டோம் உன்னாலே
மெல்லிய! யிடைகண்டு! கல்வியும் போகுதே
மேகமும் கூந்தலும்தான் — கண்டேனே

டயானா

கற்றவர்! உற்றவர்! பெற்றவர் மறந்துமே
கவிதைகள் சாற்றுகின்றீர் — நிரையாய்
சற்றுப்! பொறுத்திடு! மற்றுரை தருகின்றேன்
சங்கதி சொல்லிடுவேன் — விரைவாய்

டயானா

சேவியர், எமது வரலாற்றுத்துறைப் பேராசிரியர் வண. பிதா. இன்னாசியார் உங்களைக் காணும்படி எனக்குப் போனவாரம் தேவாலயத்துக்குப் போனபோது கூறினார். தயவுசெய்து அவரைப் போய்க் காண்பாயாக.

சவேரியார்

‘‘டயானா’’ செய்திக்கு நன்றி. எமது ஒன்று கூடும் விருத்துபசாரத்தை வருகிறவாரம் ‘‘சமூக நலன் புரியும்’’ மண்டபத்தில் வைப்போம். நீங்கள் பிறகு என்னைச் சந்திக்கவும்.

# அங்கம் 4

இடம்: பரீஸ் நாட்டுத் தெருவோரம்

பங்குகொள்வோர்: இளைஞன் சவேரியார்

நிலைமை: சந்நியாசி இன்னாசியாரை தேடிப்போதல்

இராகம் : தேசியுதோடி தாளம் : ஆதி

மெட்டு : எஸ்தாக்கியார் நாடகம் — பக்கம் - 116

கல்வியை என்றுமே
　　கரும்பதாய் தந்ததோர்
பல்கலை வேந்தனையே
　　பார்க்கவே செல்வேன்
சொல்பொருள் கருத்தையே
　　சொத்தென எடுக்கவே
வல்லோனின் இல்லமதின்
　　வாசல் போகுவேன்

பட்டமே பெற்றதற்கு
　　பரிசது தருவதற்கோ
சட்டத்தின் வல்லுனரின்
　　சாலை செல்வேன்!
பெட்டிக்குள் பாம்பினைப்போல்
　　பெரியவர் முன்னிலையில்
சுட்டபொன் போன்றவரின்
　　சுகங்கள் கேட்பேன்

அன்னவர் இடமிருந்து
　　ஆசிகள் பெற்ற பின்பு
கன்னியர் மாடமதை
　　காணப் போவேன்!
பின்னல் சடையழகை
　　பிஞ்சு முகவெழிலை
சின்ன மனம்நிறைய
　　சிறையில் வைப்பேன்!

# அங்கம் 5

இடம் : சந்நியாசி இன்னாசியார் இல்லம்

பங்குகொள்வோர் : சந்நியாசி இன்னாசியார்

நிலைமை : சந்நியாசி இன்னாசியார் இறைவனைப் புகழ்ந்து பாடுதல்

## கலித்துறை

பாரினில் பாவம் போக்க படிதனில் வந்த தேவே!
நீரினில் மீன்கள் ஆக்கி நினைத்ததை புரிந்த கோவே!
போரினில் மனிதர் தன்னை பொறைதனில் ஈசன் காவே!
பேரினில் யேசு நாதா பேரருள் என்றும் தாவே!

இராகம் : பைரவி　　　　தாளம் : ஆதி

மெட்டு : தேவசகாயம்பிள்ளை நாடகம் — பக்கம் - 130

## வண்ணத்தரு

போற்றுவேன் அண்ணல் பாதம்
சாற்றுவேன் பண்ணில் வேதம்
மாற்றுவேன் மண்ணில் பேதம்
ஏற்றுவேன் ஞான போதம்

இன்னலும் போக்கிட
வன்மைகள் நீக்கிட
முன்னவர் ஆக்கிய
நன்னயம் தூக்கிட

ஆவியே தந்தவர்
பாவியோர் மீட்டவர்
சாவிலே வென்று நீ
நாவிலே. வந்திடு

— போற்றுவேன்

பாரத்தை ஏற்ற ஈசா
பூரண மான தாசா
ஆரணம் தந்த நேசா
காரணப் பொருளே தேசா

தொண்டரும் சேர்ந்திட
விண்ணவர் வாழ்த்திட
எண்ணிய கருமமே
பண்புடன் ஓங்கிட

நாடுகள் விட்டுமே
காடுகள் கடந்துமே
நீடுயர் சேவையோர்
தேடுவேன் நானுமே

— போற்றுவேன்

வசனம் !

இறைவா! மறைபணிகள், நிறைவதாய்ச் செய்வதற்கும், என்னால் ஆரம்பிக்கப்பட்ட யேசுசபை ஊற்றுநீர் போல் வற்றாமல் உலகமெங்கும் பரவ வகை செய்வாய் ஈசனே!

# அங்கம் 6

இடம் : சந்நியாசி இன்னாசியார் இல்லம்

யங்குபெறுவோர் : சந்நியாசி இன்னாசியார் இளைஞர் சவேரியார்

நிலைமை : பொய்யுலகைவிட்டு, மெய்யான உலகிற்கு வரும்படி சந்நியாசி இன்னாசியார் இளைஞன் சவேரியாருக்கு அறிவு புகட்டுகிறார்.

## இன்னாசியார் கவி

தலையது தாழ்த்தி எம்முன் தாளினைப் பணிந்து நிற்கும்
கலைபல கற்றுத் தேர்ந்த காளையே கேளுமிப்போ
வலைதனில் பட்ட மீன்போல் வாழ்க்கையை மாற்றிக் கொண்டாய்
கொலைபட்ட யேசுநாதர் கோமகன் பாதை ஏற்பீர்

பாட்டு

இராகம் : கரகரப்பிரியை — தாளம் : ரூபகம்

மெட்டு : எஸ்தாக்கியார் நாடகம் — பக்கம் - 103

இன்னாசியார்

ஆவியில் வந்ததோர் யேசு — அவர்
ஆற்றிய தொண்டுமே யேசு
பாவிகள் கொண்டதோர் மாசு — அந்தப்
பரமனும் மாற்றினார் தேசு

**சவேரியார்**

பட்டமும் புகழுமே கொண்டேன் — எழில்
பாவையர் சுகமதை கண்டேன்
கெட்ட மதுவையே உண்டேன் — பல
கேளிக்கை கோலமே வெண்டேன்

**இன்னாசியார்**

மாயை உலகையே நம்பி — உந்தன்
மதியது போகுதே தம்பி
தாயை மறப்பதே தப்பு — எம்தன்
தற்பரன் புகழுமே செப்பு

**சவேரியார்**

மாடமும் கூடங்கள் நாடி — மெத்த
மகிழ்வுடன் சிந்துகள் பாடி
ஆடகம் தன்னையே சூடி — நானும்
அழகிகள் பலருடன் ஆடி

**இன்னாசியார்**

பொய்யதை தேடியே வாழ்ந்தாய் — வெறும்
பொன்மணி தன்னிலே வீழ்ந்தாய்
மெய்யது வழியிலே செல்வாய் — நல்ல
மேலுரை ஒன்றையும் சொல்வாய்

**சவேரியார்**

ஆசானின் அறிவையும் ஏற்றேன் — பொல்லா
அகந்தையின் தன்மைகள் தோற்றேன்
பாசமாய் தொண்டதன் ஊற்றும் — எல்லா
பாகமும் பாய்ந்திட செய்வேன்

**சவேரியார் வசனம்**

அடிகளாரே! எனது மனம் தங்களின் அறிவுறுத்தலின் பின்பு, துறவறத்தில் நாட்டம் கொண்டுள்ளது.

இன்னாசியார் வசனம்

''ஒருவன் இந்த உலகத்தை எல்லாம் தனக்கு ஆதாயமாக்கிக் கொண்டாலும் தனது ஆத்துமாவை இழப்பானென்றால் அவனுக்கு அதனால் என்ன பலன் ஏற்படப் போகின்றது'' இந்த மேற்கோளை உணர்ந்து நடப்பாயாக.

சவேரியார் வசனம்

தற்பரன் யேசுதந்த தரித்திரத் துறவு பூண, உற்றவர், பெற்றோர், மற்றோர், எல்லோரையும் விட்டு, பொற்புயர் துறவறத்தை மேற்கொள்ளப் போகின்றேன்.

# அங்கம் 7

இடம் : மன்னார் ( மாந்தை மாநகர் ) கடற்கரை

பங்குகொள்வோர் : மாதோட்ட வியாபாரி, வங்காலை வியாபாரி முச்லி நாட்டு வியாபாரி

நிலைமை : வியாபாரிகள் தங்கள் பண்டங்களை விலைகூறி விற்கின்றார்கள். மக்கள் பொருட்களை வாங்குகின்றார்கள். அப்போது மதகுரு ஒருவர் போகின்றார்.

திரு. சின்னமணி அவர்களின் (வில்லுப்பாட்டு மெட்டிலிருந்து எடுத்தது)

பாட்டு

மாதோட்டவியர்பாரி

தரத்திலுயர் நெல்லு — எந்தன்
தறையில் விளை நெல்லு
மொட்டைக் கறுப்பனும் — பச்சைப்பெருமாளும்
வெட்டியளக்காமல் தந்திடுவேன் நானும்
சம்பா! பலதுடன் சீனச் சட்டியும்
அம்மா! ஐயாமாரே! இங்கு வருவீரே
— தரத்தில் உயர் நெல்லு ...

**வங்காலை வியாபாரி**

கடல் மீன் வாங்கலையோ — அம்மாமாரே
கடல் மீன் வாங்கலையோ
கட்டா! செப்பலி! திருக்கை! நெத்தலி!
விட்டா கிடையாது! மலிவுதான்! இவ்விடம்
பாரையும்! மயறியும்! திரளி! முரலுண்டு
ஆரையும்! பார்க்காமல் அண்ணன்மார் வாருங்கோ
— கடல் மீன் ...

**முசலி வியாபாரி**

முத்தில் தரம் நீலம் — கங்கை
முசலி தந்த கோலம்
பத்தினிப் பெண்டிரும் பாங்குடன் விரும்பிடும்
மெத்த அழகுள்ள மேன்மைகொள் முத்திது
அல்லியாம் ராணியும் அழகுற அணிந்திட்டாள்
சொல்லும் விலைசரி மாதரே! வாங்குங்கோ!
— முத்து ...

**மாதோட்ட வியபாரி**

விலையில் இது குறைவு — நீரும்
விரைவில் பணம் எடுப்பீர்
வஞ்சிக் குளத்து நெல் வட்டக்கண்டல் தந்த நெல்லு
கஞ்சி குடிக்கவே! கற்கண்டு போலாகும்
மாதோட்டம் தந்ததோர்! மாணிக்க நெல்லைப்பார்
ஏதேனும் கூறாமல் — எடுங்களே! காசுகள்
— தரத்தில் ...

**வங்காலை வியாபாரி**

கணவாய் வாங்கலையோ! அண்ணமாரே
கணவாய் — வாங்கலையோ
நண்டு! மதனமும்! நாறாமல் கிடக்குது
கொண்ட முதலிலே! கொடுக்கிறேன் வாங்குங்கோ
சீலாவும்! இறாலுடன்! சிங்கறால்! தருகின்றேன்
ஏலாது விட்டாலே! வெட்டியும் கொடுக்கின்றேன்
— கடல் மீன்

முசலி வியாபாரி

தேனில் சுவை இதுதான் — காட்டில்
தெரிந்த வதை இவைதான்
சிப்பியும்! சங்கிலே! சித்திர வேலையும்
குப்பி விளக்குடன்! குடையுமே தருகின்றேன்
கையில் அணியுமோர் காப்பதே! பாருங்கோ!
மையது போகாதே மனமதாய் வாங்குங்கோ
— முத்தில் ...

# அங்கம் 8

இடம் : யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் நல்லூர் — சங்கிலியன் மாளிகை

பங்குகொள்வோர் : செகராசசேகரன் அல்லது சங்கிலியன், ஏவலர்கள் சேவகர்கள்.

நிலைமை : மாந்தை, மன்னார், முசலி ஆகிய பகுதிகளில் மதகுருக்களின் யேசுமறைப் போதனையைக் கேட்டு மக்கள் மதம்மாறி வருகின்றார்களென்பதையும், மேற்படி பகுதிகளிலுள்ள, கடல்படு திரவியங்களையும், தரைபடு திரவியங்களையும், காடுபடுதிரவியங்களையும், அராபிய வியாபாரிகளிடமிருந்து பறித்து மாந்தை வன்னி ஆகிய பகுதிகளிலுள்ள வணிகத்தை, போத்துக்கேயர், தமது ஏகபோக உரிமையாக்குகின்றார்களென ஏவலர்கள், செகராச சேகர மன்னனுக்கு கூறுகின்றார்கள். அதைக் கேட்ட மன்னன் கொதித்தெழுந்து, மன்னார் நோக்கிப் படைதிரட்டும்படியும் மன்னாரில் மதம் மாறியவர்களை படுகொலை செய்யும் படியும், போருக்கு பேரணி கூட்டுவதற்கு முரசறிவிப்பு செய்யும் படியும், ஆணையிடுகின்றான்.

ஏவலன் வசனம்

1-ம் ஏவலன்

அரசே! மாந்தை, மன்னார் முசலி, ஆகிய பகுதிகளில் முத்துக்களையும், நெல்லையும், வன்னிப்பகுதியாகிய பனங்காமத்திலுள்ள யானைகளையும் போர்த்துக்கேயர், களவாடி, முஸ்லீம் வியாபாரிகளிடமிருந்த வியாபாரத்தை, தமது, ஏகபோக உரிமையாக்கி வருகின்றார்கள்.

சங்கிலியன் வசனம்

ஆ! அப்படியா?

2-ம் ஏவலன்

அரசே! மாந்தை, மன்னார், முசலி, ஆகிய பகுதிகளில், தூத்துக் குடியிலிருந்து வந்த மதகுருக்களின் போதனையால் பலர் யேசு மதத்துக்கு மாற்றப்படுகின்றனர்.

சங்கிலியன் வசனம்

ஆ! என்ன ஏமாற்றம்

## சங்கிலியன் களிநெடில்

ஏரோங்கும் முசலியுடன் மாந்தையாம் மன்னாரில்
எழில் வளங்கள் எவ்விடமும் தோன்றிடுமே!
ஏந்தலாய் நானிருக்க எதிரிகளும் வந்துமே
என்செல்வம் கவரலாச்சோ!

பாரோங்கும் யாழ்நாட்டில் பார்த்திபனாய் ஆழ்கையிலே
பறங்கியரும் இறங்குதுறை இட்டனரோ!
பாதமதே வைத்தோரை பன்றிகளும் உண்ணவே
படுகொலைகள் செய்கு வேனே

தேரோங்கும் மாதோட்டம் தென்றலே பாடிடுமே
தெருக்களிலே போதிக்கவும் தொடங்கினரோ!
தெய்வமாய் சிவனிருக்க யேசுமறை மாற்றிடவே
தேடிய தாய் வந்தான் தானோ!

கூரோங்கும் வாளினால் குடல்தனையே வெட்டியே
கூற்றவனார் புரத்துக்கு அனுப்பிடுவேன்
குருவவனைப் பிடித்துமே குருதியும் எடுத்துமே
குாங்கு நாய் குடிக்கச் செய்வேன்

## சிந்து

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

மெட்டு : தேவசகாயம்பிள்ளை நாடகம் — பக்கம் - 57

### பல்லவி

அங்கமும்தான் துணிவாச்சோ — பறங்கியர்க்கு
அங்கமும்தான் துணிவாச்சோ

### அனுபல்லவி

அங்கமும்தான் துணிவாச்சோ
மங்கை குலம் மாறலாச்சோ
சங்கொலிகள் கேட்கும் நாட்டில்
பங்கமதே செய்கு வேனே

முத்தெடுக்க நாடு வந்து
பித்தரைப் போல் கேடு செய்து
சத்தியத்தை நீடு கொண்ட
அத்தகரை ஓட வைத்து

தென்திசைக்கனுப்பேனோ — பருந்து நரி
விருந்துண்ண வையேனோ — போர் — போரென்று

கொட்டு முரசுகள் தட்டி
எட்டுத் திக்கு வீரர் கூட்டி
துட்டனவன் தன் கெறுவின்
கொட்டமது போக்கிவைப்பேன்

— அங்கமும் தான் ...

சங்கிலியன் வசனம்

ஏ டேய் ஏவலனே! மன்னார் நோக்கிப் படையெடுக்க, போரணி கூட, பேரணி நீட, பேரிகை முரசுகள் கொட்ட முரசறிவிப்பவனுக்கு உத்தரவு இடுவதுடன் எமது கொலை வீரர்களையும் வரும்படிசொல்.

ஏவலன் : அப்படியே அரசே

# அங்கம் 9

முரசறிவிப்போன்

இரண்டாம் வரவு

இராகம் : நொண்டிச் சிந்து தாளம் : ஆதி

பாட்டு

பாட்டிலே! ஓதிடுவேன்! — அந்த
பார்த்திபன் ஆணைதான் சொல்லிடுவேன்
நாட்டிலே! இருப்போரே! — நானும்
நன்றாக உரைப்பதையே கேட்டிடுவீர்
— பாட்டிலே ...

கள்ளோடு! சசிப்படித்தேன் — அபின்
கஞ்சாவும் விறண்டியும் உட்கொண்டேன்
தள்ளியே! எறியுதண்ணே! — எந்தன்
தலையுமே சுற்றுதே! பெரியோரே
— பாட்டிலே ...

பிள்ளையே பத்தெனக்கு — பெண்டில்
பின்னாலே! தொடருவாள் எனைப்பிடிக்க
வெள்ளையே! நிறமுடையாள் — வள்ளி
வெருட்டுவாள் வெறியதே வந்தாலே
— பாட்டிலே ...

வசனம்

யாழ்ப்பாண இராட்சியத்தின் முண்டங்களே! ஓ ... இல்லை ... இல்லை ... மகாஜனங்களே! மன்னாரில், பறங்கியர் ஆட்சிகொண்டு, தமது மதத்தை பரப்புகிறார்கள். பரப்பினால். எமக்கென்ன ... இல்லை ... இல்லை, அதற்காக ராசமகாராசன்! செகராசசேகரன் சங்கிலியன், ஆனைகள், சேனைகள், ரத, புரவிப் படையோடு மாந்தை நோக்கி படையெடுக்கின்றான். எல்லோரும் சேருங்கள் ஆனால் ... நான் சேர மாட்டேன்.

# அங்கம் 10

இடம் : மன்னார்

பங்கு கொள்வோர் ; இரண்டு சேவகர்கள்

நிலைமை : செகராசசேகரன் அல்லது சங்கிலி அரசனின் ஆணைப்படி சேவகர்கள் அரண்மனை வருதல்

இராகம் : கல்யாணி தாளம் : அடதாளம்

மெட்டு : தேவசகாயம்பிள்ளை நாடகம் — பக்கம் 61

பல்லவி

சேவகன் 1

கொல்லும் மாந்தர் பாரடா — வேந்தனவன்
கொல்லும் மாந்தர் பாரடா

சரணம்

கொல்லும் நோக்குடனே கோதை ஒருவள் தன்னில்
கொண்டை தனைப்பிடித்து கழுத்தை வெட்டவே போனேன்
மெல்ல அவளும் தானும் முடியைக் கழற்றி விட்டு
மெதுவாய் தப்பிவிட்டாள் மிகவும் வெற்றிகண்டேன்
— கொல்லும் ...

சேவகன் 2 வசனம்

ஹி ஹி ... மொட்டைத் தலைச்சியை வெட்டப்போய் ஏமாந்த மடையா! நான் சொல்லுகிறேன் கேள்

பாட்டு

இருட்டு அறைதனிலே எலியைப் பிடிக்கப் போனேன்
இல்லாள் ஒருதடியை எனக்குத் தூக்கித் தந்தாள்
குருட்டுக் கண்ணனைப்போல் குறுக்கே வீழ்ந்திடவே
குறியும் தப்பியதே எலியும் பாயவிட்டேன்
— கொல்லும் ...

சேவகன் 1 வசனம்

எலி! பிடிக்கத் தெரியாத மாவீரன் இவன். நான் சொல்லுறன் கேளடா...

பாட்டு

தென்னம் தோட்டமொன்றில் தேங்காய் பறிக்கப் போனேன்
தெருவால் ஒருவனென்னை துரத்தி ஓடி வந்தான்
முன்னால் ஓட முன்பே முதுகில் அடியும் பட்டு
முழங்கால் முறிந்துவிட மூச்சும் போனதடா

சேவகன் 2 வசனம்

எடேய்! தேங்காய் கள்ளா ... இதுதானா உன் வீரம், நான் சொல்லுறன் கேள்

பாட்டு

படிக்கும் காலமதில் பாடம் மறந்துபோனேன்
பதுங்கி வாங்கினுள்ளே ஒளிந்து மறையும் போது
தடியும் கையெடுத்து ஆசான் அருகில் வந்து
தழும்பு வைந்ததையும் தம்பி நீயும் பாரேன்
— கொல்லும்

1-ம் சேவகன் வசனம்

எடேய்! இது எல்லாம் இருக்கட்டும். அரசன் ஆணையை நிறைவேற்ற வாடா.

# அங்கம் 11

இடம் : யாழ்ப்பாண இராட்சியம்

பங்குகொள்வோர்கள் : செகராசசேகரன் அல்லது சங்கிலி அரசன் கொலை செய்யும் சேவகர்கள்

நிலைமை : மதம்மாறிய மன்னார் சுதேசிகளை கொலை செய்யும்படி செகராசசேகரன் ஆணையிடல்

சங்கிலியன் வசனம்

இடேய்! கொலை வீரர்களே! நீங்கள் மன்னாருக்குச் சென்று மதம்மாறிய சுதேசிகளை, கொலை செய்து, வெற்றியோடு திரும்பி வாருங்கள்.

சேவகர்கள் : அப்படியே! அரசே

# அங்கம் 12

இடம் : தெரு

பங்குகொள்வோர் : கொலை வீரர்கள் (சேவகர்கள்)

நிலைமை : மன்னாரில் கிறிஸ்தவர்களை வெட்டப் புறப்படுதலும், அங்கு எழுநூறு (700) கிறிஸ்தவர்களை கொலை செய்தலும்

இராகம் : மோகனம் தாளம் : ஏகதாளம்

மெட்டு : கண்டியரசன் நாடகம் — பக்கம் - 73

1-ம் சேவகன்

வெட்டும் வாளை வெளியில் எடுத்து
வேந்தன் சொல்லைக் காக்கவே
கொட்டு முரசு கொள்கை ஏற்று
கொலைகள் பலதை நடத்துவோம்

2-ம் சேவகன்

வேதக் காரரர் வேறு வந்தால்
வேலின் முனையால் குத்துவோம்
ஆதி சமயம் அழிக்க வந்தோர்
ஆவி தனையும் போக்குவோம்

1-ம் சேவகன்

அங்கும் இங்கும் தேடிப் பார்ப்போம்
ஆட்கள் பலபேர் போகின்றார்
பொங்கும் மாலைப் பொழுதில் இப்போ
பொன்னும் உயிரும் கவருவோம்

2-ம் சேவகன்

சின்னப் பாலன் சிரசும் வெட்டி
சிந்து நீரில் எறிகுவோம்
மன்னர் சொன்ன உரையின் படியே
மக்கள் பலரைக் கொல்லுவோம்

2-ம் சகவகன் வசனம்

அதோ! கொஞ்ச வேதக்காரர் போறாங்கள். வாடா கொல்லுவம்.

(அரசனின் ஆணைப்படி, மன்னாரில் படைவீரர்கள் எழுநூறு (700) கிறிஸ்தவர்களை கொலை செய்கிறார்கள். அவர்களில் ஒரு தாயும், மகனும்

இராகம் : லாவணி தாளம் : ரூபகம்

மெட்டு : கண்டியரசன் நாடகம் — பக்கம் - 97

பாட்டு

தாய் :

வீரர்களே! தீரர்களே! பாலன் இவன் தன்னை — ஐயோ
சூரதுவாம் வாளதனால் வெட்டாதீர்கள் துரையே!

சேவகன் 1 வசனம்

எடியே! சண்டாளி! இது அரசனின் ஆணை. தா! சிறுவனை

தாய் : பாட்டு

பெத்தமனம்! துடிக்குதடா! கொலைஞரே நீர் கேளும்—ஐயோ
முத்தமது தந்தவனை வெட்டிடவும் முறையோ?

சேவகன் 2 வசனம்

ஏனடா பார்க்கிறாய்! வெட்டடா!
(ஐயோ! ஐயோ! என கூக்குரல் கேட்கிறது)

தாய் : பாட்டு

சத்தியனே! நித்தியனே! அண்ணல் யேசு நாதா
பத்துமாதம் சுமந்தவனை உன்னடியில் விட்டேன்

தாய் வசனம்

தர்மமூர்த்தியாகிய ஏக பிதாவின் மகனே! மாசில்லாத மரியாயே! கிள்ளை மொழி பேசி எனது உள்ளமெல்லாம் கொள்ளை கொண்ட பிஞ்சுப் பாலகனை! இங்கு நிற்கும் இரு வஞ்சகர்கள் தங்களுடைய கொடு கொலை வாளால் வெட்டி கோட்டானுக்கும். பருந்துக்கும் விருந்தாக்கப் பார்க்கின்றார்கள். எனது நெஞ்சை பஞ்சணை மெத்தை. யாக்கி படுத்துறங்கிய நீ, இந்த புழுதி மண்ணில் சாயப்போகின்றாய்

சின்னவயதில் பின்னல் நடைகாட்டி, கன்னல் மழலைபேசி, முத்துப் பல்வரிசை காட்டி, வித்தாரக்கதை கூறிய நீ. இறக்கப் போகின்றாய். நீ யேசுமறைக்கு ஒரு சாட்சியாக வருவதென்ற வீரமரணம் என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றது மகனே.

1-ம் சேவகன் : தாடி பிள்ளையை

சேவகர்கள் பிள்ளையை வெட்டி, அவன் தலையைத் தாய்க்கு கொண்டுவந்து காட்டுகின்றனர். அதைப் பார்த்ததும் தாய் ஏக்கத்தால் உயிர் விடுகிறாள்.

# அங்கம் 13

இடம் : யாழ்ப்பாண இராட்சியத்தின் தெருவோரம்

பங்குகொள்வோர்கள் : சங்கிலியரசனின் மூத்தமகன் இளஞ்சிங்கம்
நகர்க்காவலர்கள்

நிலைமை : வணிகம் செய்யவந்த ஒருவரால் வள்ளல் யேசுவின் மதத்தின் மகிமையை அறிந்து சங்கிலியரசனின் மூத்த மகன் மதம் மாறி ஒரு குருவிடம் ஞானஸ்நானம் பெற்று அதன் பெருமிதத்தில் தெருவில் வருகின்றான்.

இராகம் : பரசு — தாளம் : ரூபகம்

மெட்டு : தேவசகாயம்பிள்ளை நாடகம் — பக்கம் - 34

**பல்லவி**

பெற்றுக் கொண்டேனே — ஞானஸ்நானம்
பெற்றுக் கொண்டேனே

**சரணம்**

பெற்றுக் கொண்டேனே! பெருங்கொடை தன்னையே
பெயர்ந்ததே என்னுடை பாவமும் எல்லாமே
கொற்றவர் மற்றோரும் கோடிப்பொன் தந்தாலும்
கோமகன் யேசுவின் பாதை அகலேனே!
— பெற்றுக்

மாட்டுத் தொழுவமே மனையெனக் கொண்டுமே
மண்ணினில் மனுமகன் மழையில் பிறந்தாரே
ஏட்டினில் எழுதினோர் எண்ணிய ஆண்டிலே
ஏந்தலும் உலகிலே ஏழ்மையில் வந்தாரே
— பெற்றுக் ...

கீழ்த்திசை வேந்தர்கள் மூவர் வணங்கினார்
கிளையுடன் இடையர்கள் இறைமகன் பார்த்தனர்
ஏழ்கடல் அழிந்தாலும் எதிர்ப்பது வந்தாலும்
என்னுடை கொள்கையை எவர்களும் மாற்றாரே
— பெற்றுக் ...

நகர்க் காவலன் வசனம்

எமது பேரரசன் சங்கிலியனின் மூத்த மகன் ஏதோ புது வேதத்தைக் கண்டு புலம்புகின்றான், இவனை கை விலங்கிட்டு எமது அரசனின் முன்னால் நிறுத்தினால் இவனது பைத்தியம் தீர்ந்துவிடும்.

இளஞ்சிங்கன் வசனம்

எனக்குப் பைத்தியமல்ல, உங்களுக்குத்தான் பைத்தியம். இறைமகன் யேசு! மறைபரப்புதலில் நான் வேதசாட்சியாக வந்தாலும் பரவாயில்லை. கைவிலங்கிடுங்கள் நான் எனது தந்தையாரிடம் வருகின்றேன்.

## அங்கம் 14

இடம் : சங்கிலியன் அரண்மனை

பங்கு கொள்வோர் : சங்கிலியன், சங்கிலியனின் மூத்தமகன்இளஞ்சிங்கம் நகர்க்காவலர்கள்.

நிலைமை : சங்கிலிய அரசனின் மூத்த மகன் இளஞ்சிங்கன் யேசுமறையைப் பின்பற்றியதால் நகர்க்காவலர்கள் அவனைக் கைவிலங்கிட்டு இழுத்து வருகின்றனர். கோபங்கொண்ட சங்கிலியன் மகனை வாளால் வெட்டி கொலைசெய்துவிட்டு, அவனைச் சுட்டெரிக்கச் சொல்லுகின்றான். அவனைச் சுட்டெரித்த இடம் ''குருசு'' போல் பிளந்தது. அவன் ஈழத்தில் யேசுமறையின் வேதசாட்சி ஆகின்றான்.

**சங்கிலியன் கவி**

கரமது விலங்கு இட்டு காரணன் முன்பு நீங்கள்
புரமதை ஆளப் போகும் புதல்வனின் குற்றம் என்னோ?
சிரமது தாழ்த்தல் கண்டு சினமது அதிக மானேன்
தரமது பார்க்க மாட்டேன் தவறினை ஓது வீரே

**வசனம்**

நகர்க்காவலாளரே! இவனது கழுத்தில் சிலுவை ஒன்று தூங்குகின்றது. இவன் தலையைக் கீழே சாய்த்துக் கொண்டிருகின்றான். போர்த்துக்கேயர் வணிகம் செய்யவந்து மணிமுடிக்கே உரித்தான எனது மகனை மாற்றியிருக்கின்றார்கள். நீதியின் முன் தந்தை தணயன் என்ற பேதம் கிடையாது. குற்றத்தை ஓதுங்கள்.

**நகர்க்காவலன்**

அரசே! இவன் போர்த்துக்கேயரின் மதமாகிய சத்திய வேதத்தில் சேர்ந்துவிட்டான், அரசே!

**சங்கிலியன்**

ஆ ... ...

## களிநெடில்

வான் இடி! பட்டதோ! வரைபொடி! யுற்றதோ!
வாயுக்கள் நிலைமாறிப் போச்சோ!
வாலனே உந்தனது கோலங்கள் என்னடா
வகையதாய் மாட்டிக் கொண்டாய்!

தான்கெறுக்! கொண்டுமே! தாரணி! மீதினில்
தந்தைதாய் எதிர்க்க லாச்சோ!
தானைகள்! சேனைகள்! ஆனைகள்! ஏனைகள்!
தாலமே! புரண்டு! வரினும்

நான்கொலு! இருக்கையில் நகர்தனில் நீயுமே
நரிவேலை பார்க்க லாச்சோ!
நாவதை வெட்டியே நாய்க்கு நான் போடுவேன்
நலமதாய் மாறுவாய்! மாறுவாயே! நீ!

இராகம் : மோகனம் தாளம் : அடதாள சாப்பு

மெட்டு : தேவசகாயம்பிள்ளை நாடகம் — பக்கம் — 80

## சிந்து

ஆதி சமயம் விட்டு
பாதி வயதில் நீயும்
ஓதி திரிந்த அந்த
வேதம் தனையும் நீக்கி

கரத்தில் விலங்கு பூட்டி
அரச சபையைக் கூட்டி
முரசு தனையும் காட்டி
சிரசை வாளால் தீட்டி

தரை கொண்ட
வரை கண்ட
உரை வெண்ட
துரை எண்ட

வீரபுய தீரனிடம்
ஆர உரைப்பாயே

இளம் சிங்கன்

தந்தை! அரசே! கேளும்
முந்தை மதமும் விட்டேன்
சிந்தை பலது செய்தேன்
விந்தை சமயம் பூண்டேன்

முடியது துறந்திட்டேன்
படியதில் பணி செய்வேன்
'விடியலை' காணுதற்கு
மடிதலும் ஏற்றுக் கொள்வேன்

செல்வமும் மாயை யென்பேன்
சொல்மதி கேளு மையா!
வல்லவன் இறை யேசு
நல்வழி நாடு வேனே

அணு

முடிதனை மகிழ்வுடனே!
அடிதொழுது வணங்கினேன்

சங்கிலியன் களிநெடில்

பிஞ்சது வயதிலே பிதாவையும் மதியாமல்
பித்தன் போல் பேசுகின்றாய்
பிறர்சொல்லு கேட்டுமே! பிழையான வழியிலே
பிரசாரம்! செய்ய லாச்சோ!

வஞ்சனை! கொண்டுமே! வணிகனால் நீயுமே
வாழ்க்கைதான் மாற்றுகின்றாய்!
வாளுக்கு இப்போது வேலைதான் வந்தாச்சே
வாய்க்கொழுப்பு அடக்குவேன்! அடக்கு வேனே!

சிந்து

ஆகா! அரசன் முன்பு
சேயாய்! நீயும் வந்து
நாவால் சபையின் மீது
பேச மமதை கொண்டாய்

வேலால் உன்னைத் தாக்கி
காலால் உதைத்துத் தூக்கி
கோலால் அடித்து நீக்கி
தோலால் செருப்பு ஆக்கி

இறை ஓங்க!
குறை நீங்க
முறை தாங்க
அறை வீங்க

தாதைதனின் பாதைவிட்ட
காதை முடிப்பேனே

( வாளால் வெட்டுதல் )

சங்கிலியன் : அடேய் ஏவலரே சொற் கேளாப்பிள்ளையால் குலத்துக்கு ஈனம். இவனைக் கொண்டு போய் அதோ தெரியும் புளிய மரத்தின் கீழ் சுட்டெரித்து விடுங்கள்.

ஏவலன் : அப்படியே! செய்கின்றேன் அரசே

# அங்கம் 15

இடம் : மாந்தை மாநகர்

பங்குகொள்வோர் : துறவி பிரான்சிஸ் சவேரியார், பொதுமக்கள்

நிலைமை : துறவி பிரான்சிஸ் சவேரியார் மாந்தைத் துறைமுகத்துக் கண்மையில் வேதம் போதிக்கிறார்.

## கொச்சகம்

குன்றினில் மரித்த தாசர்!
குருதியை ஈந்த சீசர்!
அன்றது இட்ட வித்தை
அழியாமல் காக்க வந்தேன்!
நின்றுநான் மன்னார் நாட்டில்
நிமலனின் புகழைச் சொல்வேன்
என்றுமே காக்கும் வல்லோன்
ஏசுவின் வழியில் செல்வோம்

வசனம் :

இறைமகனே! பஞ்சகாயா! வரலாற்று நாயகனே! மனுக்குலத்தின் மீட்புக்காக மூன்று ஆணிகளில் தொங்கி மூவுலகத்தை இரட்சித்த ஈசா! ஈழநாட்டில் இறைமகனாம் உந்தனின் மறையைப் பரப்புவதற்கு அருள்பாலிப்பாயாக.

## பாட்டு

இராகம : ஆனந்தபைரவி — தாளம : திரிபுடை

மெட்டு : தேவசகாயம்பிள்ளை நாடகம் — பக்கம் – 42

ஓதிடுவேன்! யேசுவின்! வேதம்
ஒளியது பறவைகள் நாதம்
வாதிடுவார் பணியிவர் பாதம்
வார்த்தையைக் கேட்டிடு வீரே!

மாந்தைக்கடல் காட்டிது நீலம்
மனுமகன் குருசது கோலம்
வேந்தர்பலர் விட்டனர் சீலம்
வெஞ்சமர் மறையுமாமே

ஆணியதே! மூன்றது அறைந்தார்
ஆறிலரை நாளதில் மறைந்தார்
கேணியதாய் ரசமதை நிறைத்தார்
கேட்டதை உணர்ந்திடு வீரே!

வசனம் :

ஈசா! கொஞ்சும் மொழிபேசும் மழலைச் செல்வங்களை என்னிடத்தில் வரவிடுங்களென மொழிந்த அண்ணலே! கெஞ்சி வருவோர்க்கெல்லாம் மிஞ்சு அருள்மழை பொழிந்து தஞ்சம் கொழிக்கும் பேரரசே!

''வாழ்வளிக்கும் வார்த்தைகளை மாந்தருக்கு வழங்குகின்ற வேளையிலே அவர்கள் வயிற்றுப் பசி போக்க அப்பங்களையும், மீன்களையும் எடுத்து பல்லாயிரம் பேருக்கு அளித்தபெருமானே! என் வாயிலிருந்து வருகின்ற ''நற்செய்தி'' ஒவ்வொன்றின் வித்துக்களும் உண்மையை ஏற்கும் சிலரையாவது மனம் திருப்புவதற்கு உதவி புரிவாய் பராபரனே!

# அங்கம் 16

இடம் : மாந்தை நகர்

பங்கு கொள்வோர் : மாந்தை நகர் பெண்களும், ஆண்களும்

நிலைமை : மதகுரு சவேரியாரின் போதனை கேட்பதற்கு மக்கள் போதலும், ஞானஸ்நானம் பெறுதலும்.

காத்தான் கூத்து மெட்டு

பெண் : மாமுனி தேடியல்லோ மாந்தை நகர் மக்கள் நாமும்
மகிழ்வுடனே போறோமே மாந்தை நகர் மக்கள்

ஆண் : குருவினை நாடியல்லோ மாந்தை நகர் மக்கள் — நாங்கள்
குதூகலமாய் போறோமே மாந்தை நகர் மக்கள்

பெண் : வள்ளலைத் தேடியல்லோ வனிதையர் நாமும் — மிக
வாஞ்சையுடன் நடக்கின்றோம் வனிதையர் நாமும்

ஆண் : பேரருள் பெற்றிடவே ஆடவர் நாமும் — இங்கு
பெருங்களிப்பு கொண்டோமே ஆடவர் நாமும்

பெண்கள் வசனம் :

குருவானவரே! தங்கள் போதனைகளை பல திசைகளிலும் கேட்டு தங்களிடம் ஞானஸ்நானம் பெறவந்தோம்.

## மதகுரு பிரான்சிஸ் சவேரியார் ஆசரியம்

சாரலின் மீது சத்தியன் ஏறி
சாற்றிய மொழிசில கேளீர்
சாந்தம் உடையோர் பாக்கிய வான்கள்
சான்றோர் என்பதும் அவரே!

ஆரதும் மண்ணதில் அறியா வண்ணம்
அன்புடன் நோன்பினைச் செய்வீர்
அயலவர் கண்ணில் உத்தரம் எடுக்க
ஆசையும் கொள்ளுதல் வேண்டாம்

ஊரதில் பெரிய செல்வந்தர் பணத்தை
ஊர்வன அரித்தது விடுமே
உறங்கிய நேரம் கள்வரும் கவர்வார்
உலகமும் மாயை தானே

பாரது தன்னில் பரமனின் வார்த்தை
பாங்குடன் ஏற்றவர் உலகில்
பாறையில் கட்டிய மனைதனை ஒப்பார்
பாவிகள் மீட்டவர் இவரே!

( சிலுவையைத் தூக்கி காட்டுதல் )

மதகுரு பிரான்சிஸ் சவேரியார் வசனம் :

நீங்கள் போற்றுதற்கரிய, முத்தான யேசுவின் வார்த்தைகளான வித்துக்களை அறிந்து கொண்டீர்கள்.

அவரே! உங்களை மீட்டு தமது விண்ணகத் தந்தையின் மக்க ளாக்கி அவரது ஆவியின் கொடையைத் தருவார். அந்த தந்தை! மகன்! ஆவியின் பேரால் திருமுழுக்குத் தந்தேன் — நீங்கள் பெற்ற வாழ்வுக்கு சாட்சிகளாக வாழுங்கள்

காத்தான் கூத்து மெட்டு

பெண் : பெற்றுக் கொண்டோம் நாங்கள்
பெற்றுக்கொண்டோம் — அந்த
பேரருள் தன்னையே பெற்றுக் கொண்டோம்

ஆண் : கண்டுவிட்டோம் நாங்கள் கண்டு விட்டோம் — ஏழ்மை
காருண்ய சிலரைக் கண்டு விட்டோம்

பெண் : தொட்டுவிட்டோம் நாங்கள் தொட்டுவிட்டோம் — அந்த
தொண்டரின் பாதத்தை தொட்டுவிட்டோம்

ஆண் : சொன்னமதி நாங்கள் ஏற்றுக் கொண்டோம் — அவர்
சொற்படி நாங்களே நடந்திடுவோம்

# அங்கம் 17

இடம் : மாந்தை நகர் கடற்கரை

பங்குகொள்வோர் : மதகுரு பிராசிஸ் சவேரியார், கப்பல் செலுத்து வோர் இருவர்

நிலைமை : ஈழநாட்டில் யாழ்ப்பாணம், மாந்தை ஆகிய பகுதிகளில் தமது மதப்பணி முடிந்ததும் மதகுரு சவேரியார் சீனா தேசம் செல்லுதல்.

பிரான்சிஸ் சவேரியார் வசனம் :

ஐயா, கப்பல்காரரே! எனது மதப்பணி ஈழநாட்டில் நிறைவேறி விட்டது. நான் சீனா தேசம் செல்ல வேண்டியிருப்பதால் என்னைத் தங்கள் கப்பலில் ஏற்றி சீனாவுக்கு கொண்டுபோய் விடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

கப்பல்காரர் வசனம் : சரி! கப்பலில் ஏறும்.

## கப்பல் பாட்டு

ராகம் : நாகவராளி தாளம் : ரூபகம்

மெட்டு : எஸ்தாக்கியார் நாடகம் — பக்கம் – 16

### பல்லவி

ஏலயேலோம் ஏலவலி — தத்தெய்தாம்
ஏலவலி யேலயே லோம்

### சரணம்

தேரோங்கு மாந்தை விட்டு — நாங்கள்
தெண்திரையில் போவதற்கு
கூரோங்கு வேலும் கொண்ட — எங்கள்
குமரனைத்தான் வணங்கிடுவோம்
நேராக ஆஞ்சானை நீட்டி இழுத்து
நேர்த்தியாய் ஆலாத்தைப் பார்த்துமே வைத்து
வாராகச் சுக்கானை வடிவாய்ப் பிடித்து
வங்கிலே மாட்டடா கயிறையும் நன்றாய்!
சீராக விசாளியால் தண்ணியை அள்ளி
சிதறியே எறியடா பாய்தனை நோக்கி
பாராமல் வையாதீர் பாவலை அங்கு
பாய்ந்ததாய் ஓடுதே வணிகரின் கப்பல்!
— ஏலயேலோம் ஏலவலி

அலைகிழித்து போகுதடா — எம்தன்
அழகுள்ள கடலரசி!
தலைச்சூடா எழுப்புதையா — அந்தத்
தாமானையும் இறுக்கிக் கட்டு
கலைகின்ற நீரொன்று விரைவுடன் வந்து
கடையாலைத் தள்ளுதே கவனமாய் இருங்கோ!
உலைதனில் மண்பானை வைத்தது நீங்கள்
உண்ணவே சோற்றையும் ஆக்கிடுவீரே!
விலைகொள்ளா இக்கப்பல் அணியமும் இன்று
விதமதால் தோன்றுதே விந்தையும் இதுதான்!
கொலையதே எழுநூறு கோமகன் செய்தார்
கொடுமையே கண்டோமே கொதிக்குதே நெஞ்சம்!
— ஏலயேலோம் ஏலவலி

**கப்பல்காரத்தலைவன் வசனம் :**

மதகுருவே! காற்றோ கச்சானில் கொண்டலாக வீசுகிறது புயல் அடிக்கும்பேபல் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. நீர் இந்த சஞ்சியஸ் தீவில் இறங்கி, பிறகு சீனா செல்லும். நாங்கள் மாந்தை போகின்றோம்.

**மதகுரு பிரான்சிஸ் சவேரியார்**

ஐயா! கப்பல்காரரே! நானோ அதிக நாட்கள், கப்பலில் பிரயாணம் செவ்ததினால், நோய்வாய்ப்பட்டிருக்கிறேன். இருந்தும், மறைப் பணிக்காக இந்தத் தீவில் இறங்குகின்றேன். நீங்கள் போய்வாருங்கள் நன்றி,

# அங்கம் 18

**இடம் :** சீனா தேசத்துக்கருகிலுள்ள சன்சியஸ் தீவு

**பங்குகொள்வோர் :** மதகுரு பிரான்சிஸ் சவேரியார்.

**நிலைமை :** சன்சியஸ் தீவில் அந்தரித்த நிலையில் விடப்பட்ட மதகுரு பிரான்சிஸ் சவேரியார் இறைவனடி சேரல்.

**அகவல்**

ஆவியின் மைந்தர் அகிலமும் வந்தே
பாவிகள் மீட்கப் பாடுகள் பட்டார்!

முள்முடி தரித்தே! மும்முறை வீழ்ந்தே!
கள்வரைக் காத்த கடவுளும் நீயே!

மலைதனில் மீதில் மணிமொழி உரைத்த
தலைமகன் யேசு தாளது பணிந்தேன்

இராகம் : தாளம் :

**பாட்டு**

மெட்டு : ஆரமணிக்கரத்தாள் — ஞானசௌந்தரி நாடகம்

ஏகபரன் வித்தே! — உந்தன்
ஏசுமதம் முத்தே!
மேகமழைக் கோவே! — வேத
மெய்ப் பொருளே காவே!

வசனம் :

இறைவா! நான் ஈழநாட்டில் விதைத்த சத்திய வேத வித்துக்கள் விருட்சமாகி, வளர துணை செய்வாய் !பராபரனே


பாட்டு

போர்க்களத்தில் நாடே — எந்தன்
பொறக்கணிகள் நீடே!
நீர்முனையின் ஊற்றே! — ஆதி
நிமலனடி போற்றே!

வசனம் :

சாவிலே வென்ற சத்தியனே என்னால் ஈழநாட்டில் சிந்திய செந்நீர்த் துளிகள் தீவெங்கும் ஞான அருவியாக மாறி, வித்துக்களுக்கு பசுமையை அளித்து, நற்கனிகளை உண்டாக்கும் பயனுள்ள மரமாக மாற வேண்டும். இதுவே எனது கடைசி ஆசை. நான் உனது பாதார விந்தம் வருகின்றேன்.

( நாடகம் நிறைவு பெற்றது )



நாடகத்தை பழக்கிய அண்ணாவியார் "எழிலிசை மன்னன்"

## வஸ்தியாம்பிள்ளை அல்பிறட்

*04-05-1990*-ம் திகதி யாழ்ப்பாணம் கொழும்புத்துறை தனிநாயகம் அடிகளார் தமிழ் மன்றம் 'வித்துக்கள்' நாடகத்தை மேடையேற்றியபோது பங்குபற்றிய கலைஞர்கள்

| | |
|---|---|
| மதகுரு பிரான்சீஸ் சவேரியார் | அருட்செல்வன் செ. ஸ்ரீவன் ராஜா |
| செல்வி டயானா | அருட்செல்வன் அ. ஞானப்பிரகாசம் |
| செல்வன் சாமுவேல் | அருட்செல்வன் செ. டன்ஸ்ரன் |
| சந்நியாசி பேராசிரியர் இஞ்ஞாசியார் | அருட்செல்வன் யோ. மவுலிஸ் |
| சங்கிலியன் அல்லது செகராசசேகரன் | அருட்செல்வன் சூ. அன்ரன் ஜோர்ஜ் |
| தளபதி வீரமாணிக்கதேவர் | அருட்செல்வன் ச. இதயதாஸ் |
| அமைச்சர் அப்பா முதலி | அருட்செல்வன் ம, றெக்ஸ் சவுந்தரா |
| இளஞ்சிங்கம் (சங், மன், மூத்தமகன்) | அருட்செல்வன் யோ. பிரான்சீஸ் |
| சேவகர்கள் | அருட்செல்வன் பெ செல்வந்தராஜ் |

| | |
|---|---|
| சேவகர்கள் | அருட்செல்வன் பெ செல்வந்தராஜ் |
| | அருட்செல்வன் றெனால்ட் அ. ஜோர்ஜ் |
| ஏவலர்கள் | அருட்செல்வன் எறிக் றோஷான் |
| | அருட்செல்வன் சி. ஆனந்தக்குமார் |
| வியாயாரிகள் | அருட்செல்வன் ஆ. யூட் நிக்சன் |
| | ,, போ. எமில் இராஜேஸ்வரன் |
| | அருட்செல்வன் சூ. மோகன் குமார் |
| | அருட்செல்வன் அ. யூட்குரூஸ் |
| கப்பல்காரர்கள் | அருட்செல்வன் சா. ஜெயரஞ்சன் |
| முரசறிவிப்போன் | அருட்செல்வன் பா. இராசசிங்கம் |
| மாத்தைநகர் மக்கள் | அருட்செல்வன் ச. மாக்ஸ் |
| | அருட்செல்வன் ச. அன்ரன் சேவியர் |
| | அருட்செல்வன் ஜேம்ஸ் சே. வின்ஸ்ரன் |
| | ,, பா. மரிய வின்சன்ரையின் |
| சிறுவன் | செல்வன் கெவின் சுரேந்திரா தேவதாசன் |

ஆர்மோனியம் : அன்ரனி பாலதாஸ்

மிருதங்கம் : சங்கீதபூசணம் எஸ். இராசசிங்கம்

இயக்குனர்கள் :

அருட்திரு ஜெறோம் லெம்பட் அ. ம. தி.

அருட்திரு கிறிஸ்ரியன் வாஸ் அ. ம. தி.

பனை அபிவிருத்திச் சபையால்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

★ பனம் கிரஸ் ★ பனம் சிரப்

★ பாணிப் பனாட்டு

★ பனம் பானம் ★ பனம் ஜாம்

அழகிய கைப்பணி, அழகுசாதனப் பொருட்களுக்கு

நாட்டின் முக்கிய நகரங்களில் செயலாற்றும்

# "கற்பகம்"

விற்பனை நிலையங்களை நாடுங்கள்

**பனை அபிவிருத்திச் சபை**

தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம்

உங்கள் மங்கள வைபவங்களை சிறந்த முறையில்
நவீன வீடியோ மிக்சர் மூலம் படம் பிடித்திட

**பிரதீப் வீடியோ மூவிஸ்**

PRATHEEP VIDEO MOVIES

உரிமையாளர் : சுனில்

இல. 31, ஈச்சமோட்டை கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

---

பத்திரிகை ஏஜன்ட்! பலசரக்கு!
இரும்புச் சாமான்கள் — கட்டிட உபகரணங்கள்
விற்பனையாளர்கள்

**வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்**

இல. 4, கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்

உரிமையாளர்கள்

ஆர். விஸ்வநாதன் ஆர். கிருஸ்னானந்தன்

---

**"ஜீவா ஸ்ரோர்ஸ்"**

இல. 40 – 3-ம் குறுக்குத்தெரு பாஷையூர்.
யாழ்ப்பாணம்.

கிளை

**ஜீவா பேக்ஹவுஸ்**

இல. 49 – புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

---

உங்கள் வீட்டுக்குத் தேவையான மின்சார உரிதிப்பாகங்கள்
நவீன நுட்ப முறையில் வழங்குபவர்கள்

**அருள் எலக்ட்ரிக்கல்ஸ்**

110, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

ஈழத்தின் பாரம்பரிய கலைகளை மேடையேற்றுவதில்

மகிழ்ச்சி அடைகின்றோம்

வித்துக்களுக்கு எமது வாழ்த்துக்கள்

# அன்ரசன்ஸ்

கடலுணவு கொள்வனவு நிலையம்

**தலைமை அலுவலகம்**

(1) இல. 82/93
ஸ்ரீ ராமநாதன் கட்டடம்
கொழும்பு - 13
தொலைபேசி 547273


(2) கடற்கரை வீதி
நாவாந்துறை
யாழ்ப்பாணம்

**கிளை அலுவலகம்**

(1) கடற்கரை வீதி
குருநகர், யாழ்ப்பாணம்

(2) 3-ம் வட்டாரம்
வங்காலை, மன்னார்

(3) கடற்கரை வீதி
விடத்தல் தீவு
மன்னார்



# கவிஞர் தேவதாசன் எழுதிய நூல் பற்றிய மதிப்பீடு

## "காத்தவன் காவியம்"

- தமிழிலக்கிய வரலாற்றில் புதிய பங்களிப்பு "காத்தவன் காவியம்',

வீரகேசரி 20-09-1987

- இருபது நாட்களில் இறையியல் காவியம் - மக்கள் மகிமை

உதயன் 03-01-1987

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம். 24-06-1987

அன்புள்ள மாணவனுக்கு
உனது "காத்தவன் காவியம்" என்ற பொருள்மிகு காவியத்தைப் படித்து இன்புற்றேன். திருமதி ச. விஜயதர்மா B. A. (Cey.) Dip. in Ed.

- "காத்தவன் காவியம்" என்ற நூலை கண்ணில்லாத நான் இன்னொருவரின் மூலம் கேட்டறிந்தேன். கண்ணுள்ளவரெல்லாம் படித்துப் படித்துப் பயன்பெறட்டும். அருட் சகோ. பி. அல்போன்ஸ்

சிறுமலர் ஆச்சிரமம், திருச்சி, தமிழ்நாடு 17-12-1987

- கவிஞர் தேவதாசன் அவர்கள் எழுதிய "காத்தவன் காவியம்" என்ற நூலை வாசித்து முடித்தேன். "கவியரசர் கண்ணதாசன்" எழுதிய யேசுகாவியத்தையும் வாசித்தேன். சில இடங்களில் கவிஞர் தேவதாசன், கவியரசர் கண்ணதாசனிலும் பார்க்க முன்னேறிக் காணப்படுகிறார்.

தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையில் 10-10-1989
திரு. கே. ஏகாம்பரம், நிர்வாக அதிகாரி
விவசாய இலாகா, திருநெல்வேலி